


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 151 12.01.2026 திங்கட்கிழமை

Chennai Volume: 01 Issue: 151 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(12-01-2026)
விசுவாவசு ஆண்டு, மார்கழி -28

பிறை: தேய்பிறை

திதி
நவமி பிற்பகல் 03.35 வரை
பிறகு தசமி

நட்சத்திரம்:
சுவாதி இரவு 11.49 வரை
பிறகு விசாகம்

யோகம்
அமிர்த/மரண யோகம்

ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி

எமகண்டம்
காலை 10.30-12.00 மணி

சூலம் - கிழக்கு

நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி.

| | |
|---|---|
| மேஷம் | கவனம் |
| ரிஷபம் | மகிழ்ச்சி |
| மிதுனம் | பரிசு |
| கடகம் | இன்பம் |
| சிம்மம் | உழைப்பு |
| கன்னி | கடமை |
| துலாம் | பக்தி |
| விருச்சிகம் | ஆதரவு |
| தனுசு | புகழ் |
| மகரம் | உற்சாகம் |
| கும்பம் | நற்செயல் |
| மீனம் | பண்பு |

# பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட் மூலம் இஓஎஸ்-என் 1 செயற்கைக்கோள் இன்று விண்ணில் பாய்கிறது

## புவி கண்காணிப்பு, ராணுவப் பாதுகாப்புக்கு உதவும்

**சென்னை,ஜன.12:**

ராணுவப் பயன்பாட்டுக்காக பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) தயாரித்த இஓஎஸ்-என் 1 செயற்கைக்கோள், பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட் மூலம் இன்று விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

நாட்டுக்குத் தேவையான தொலைதொடர்பு, தொலை உணர்வு, வழிகாட்டுதல் செயற்கைக் கோள்களை பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி, எல்விஎம்-3 ராக்கெட் மூலம் இந்திய விண வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது. வணிகரீதியாகவும் செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்புகிறது.

இதற்கிடையே, ராணுவப் பயன்பாட்டுக்கான இஓஎஸ்-என் 1 ('அன்விஷா') எனும் அதிநவீன செயற்கைக் கோளை பாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) தயாரித்துள்ளது. ஆந்திர மாநிலம் ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் முதல் ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி-சி62 ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் நாளை காலை 10.17 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதனுடன் இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்குச் சொந்தமான 15 சிறிய செயற்கைக் கோள்களும் விண்ணில் செலுத்தப்பட உள்ளன.



இதில் முதன்மை செயற்கைக் கோளான 'அன்விஷா', பூமியில் இருந்து 505 கி.மீ. உயரம் கொண்ட சூரிய ஒத்திசைவு சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்படும். இது புவி கண்காணிப்பு, ராணுவ பாதுகாப்புக்கு உதவியாக உளவுப் பணிகளை மேற்கொள்ளும். இதன்மூலம் நாட்டின் பாதுகாப்பு வலுப்பெறும். விவசாயம், நகர்ப்புற திட்டமிடல், சுற்றுச்சூழல் ஆய்வு உள்ளிட்ட பணிகளுக்கும் இந்த செயற்கைக்கோள் பயன்படுத்தப்படும்.

மற்ற செயற்கைக்கோள்களில் 'ஆயுள்சாட்', சென்னையைச் சேர்ந்த ஆர்பிட் எய்டு எனும் ஸ்டார்ட்-அப் நிறுவனத்தின் தயாரிப்பாகும். இது புவிவட்டப்பாதையில் சுற்றி வரும் செயற்கைக் கோளில் மீண்டும் எரிபொருள் நிரப்புதல் குறித்து ஆய்வு மேற்கொள்ளும். மேலும், ஸ்பெயின் ஸ்டார்ட்-அப் நிறுவனம் உருவாக்கிய கிட் (KID - Kestrel Initial Technology Demonstrator) எனும் சிறிய விண்கலத்தை பூமிக்கு மீண்டும் தரையிறக்கும் சோதனையும் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்நிலையில், ராக்கெட் பயணத்துக்கான 24 மணி நேர கவுன்ட்-டவுன் நேற்று காலை தொடங்கியது. மேலும் ராக்கெட் ஏவுதலுக்கு முந்தைய பரிசோதனைகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# குஜராத்தின் சோமநாதர் கோயிலில் பிரதமர் மோடி வழிபாடு

**அகமதாபாத்,ஜன.12:**

குஜராத்தின் கிர் சோம்நாத் மாவட்டம், பிரபாச பட்டினம் கடற்கரையில் சோமநாதர் கோயில் அமைந்துள்ளது. கடந்த 1026-ம் ஆண்டு கஜினி முகமது இந்த கோயில் மீது தாக்குதல் நடத்தி ஏராளமான செல்வங்களை கொள்ளையடித்து சென்றார். அதன் பிறகு முகலாய ஆட்சியாளர்களால் கோமநாதர் கோயில் பலமுறை தாக்கப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு முதல் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத், முதல் துணை பிரதமர் சர்தார் வல்லபபாய் படேலின் முயற்சியால் சோமநாதர் கோயில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டது.



கஜினி முகமதுவின் தாக்குதலுக்கு பிறகு ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து சோமநாதர் கோயில் கம்பீரமாக நிற்கிறது. இதை நினைவுகூரும் வகையில் கடந்த 8-ம் தேதி சோமநாதர் சுயமரியாதை பெருவிழா தொடங்கியது. இந்த விழா நாளையுடன் நிறைவடைகிறது.

இந்த சூழலில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை சோமநாதர் கோயிலுக்கு சென்றார். இரவு 8 மணியளவில் ஓம்கார மந்திரம் பாராயணம் நிகழ்ச்சியில் பங்கேற்று சுவாமியை வழிபட்டார். அதன் பின்னர் ட்ரோன் நிகழ்ச்சியைப் பார்வையிட்டார்.

இன்று காலை சுமார் 9.45 மணியளவில் சோமநாதர் கோயிலை பாதுகாக்க உயிர்த்தியாகம் செய்த எண்ணற்ற வீரர்களை கவுரவிக்கும் வகையில் நடைபெறும் பாரம்பரிய வீர யாத்திரையில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். அதன் பிறகு காலை 10.15 மணியளவில் சோமநாதர் கோயிலில் அவர் வழிபாடு நடத்துகிறார். காலை 11 மணியளவில் சோமநாதர் சுயமரியாதை பெருவிழா தொடர்பான நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசுகிறார்.

# 'ஜனநாயகன்' படத்தை பொங்கலுக்கு வெளியிட உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு

**சென்னை,ஜன.12:**

விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' படத்தை பொங்கலுக்கு வெளியிட உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

விஜய்யின் 'ஜனநாயகன்' ஜன.9-ம் தேதி வெளியாக இருந்தது. தணிக்கை சான்றிதழ் காரணமாக வெளியாகாததால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இந்நிலையில் இப்படத்தின் கேவிஎன் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பாளர் வெங்கட் நாராயணா, விஜய் ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டு வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், 'வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், என்னால் எல்லாவற்றையும் பகிர முடியவில்லை. கடந்த டிசம்பர் 18-ம் தேதி 'ஜனநாயகன்' தணிக்கைக்கு அனுப்பப்பட்டது. அதைக்குழு ஆய்வு செய்து, டிச. 22 அன்று சில மாற்றங்களைப் பரிந்துரைத்தது. 'யுஏ 16 பிளஸ்' சான்றிதழ் வழங்கப்படும் என மெயில் மூலம் தெரிவித்தனர்.

இந்நிலையில், 'ஜனநாயகன்' படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு விதித்த இடைக் காலத் தடையை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தயாரிப்பு நிறுவனம் மேல்முறையீடு செய்துள்ளது. இந்த மனுவை திங்களன்று அவசர வழக்காக விசாரிக்க கோரிக்கை வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# டெல்லியில் வரலாறு காணாத குளிர்: அடுத்த 3 நாட்களுக்கு நீடிக்கும் என எச்சரிக்கை



**புதுடெல்லி,ஜன.12:**

தலைநகர் டெல்லியில் ஜனவரி மாதத்தில் குளிர் சீராக அதிகரித்து வருகிறது. சனிக்கிழமை காலை குறைந்தபட்ச வெப்பநிலை 4.2 டிகிரி செல்சியஸாக குறைந்தது. இது டெல்லியில் குளிர்காலத்தில் பதிவான மிகக் குறைந்த வெப்பநிலையாகும். டெல்லியும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளும் மூடுபனியுடன் கூடிய குளிர் அலை காரணமாக நடுங்குகிறது. இத்துடன் வீசும் பலத்த காற்று குளிரை மேலும் அதிகரித்துள்ளது.

உத்தரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா உட்பட வட மாநிலங்கள் முழுவதும் அடுத்த 3 நாட்களுக்கு கடுமையான குளிர் அலை வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த மாநிலங்களிலும் டெல்லியைப் போன்று, மிகக் குளிரான காலைப் பொழுது 4.2 டிகிரி செல்சியஸில் பதிவாகி உள்ளது.

இந்திய வானிலை ஆய்வு மையத் தகவலின்படி வெள்ளிக்கிழமை பெய்த வழக்கத்துக்கு மாறான மழையை தொடர்ந்து இந்த திடீர் வெப்பநிலை சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த மழையே தலைநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வெப்பநிலையை குறைத்துள்ளது.

டெல்லி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நேற்றைய குளிர் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இதற்கு முன் 2023, டிசம்பர் 4, 5-ல் வெப்பநிலை 5.6 டிகிரி செல்சியஸாகவும், டிசம்பர் 1-ம் தேதி 5.7 டிகிரி செல்சியஸாகவும் குறைந்தபோது, தலைநகரில் இதேபோன்ற குளிர் காணப்பட்டது.

கடும் குளிர் காரணமாக தலைநகரில் மின்சார நுகர்வு அதிகரித்துள்ளது. மக்கள் குளிரைத் தவிர்க்க ஹீட்டர்கள் மற்றும் பிற மின் சாதனங்களை அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். இதனால், டெல்லியில் மின்சாரத் தேவை 6,087 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இது குளிர்கால மாதங்களில் இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாகும்.

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், பிஹார் மற்றும் ம.பி.யின் சில பகுதிகளில் மக்கள் குளிரில் நடுங்கிக் கொண்டுள்ளனர். இமாச்சல பிரதேசம் மற்றும் உத்தராகண்டிலும் கடுமையான குளிர் நிலவுகிறது. சில இடங்களில் உறைபனியும் காணப்படுகிறது. உறைபனியுடன் கூடிய கடும் குளிர் காரணமாக வட மாநிலங்களின் விமானங்கள் மற்றும் ரயில் சேவைகளில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகிறது.

# சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் இன்று 3,000 இளைஞர்களுடன் பிரதமர் மோடி உரையாடல்

**புதுடெல்லி,ஜன.12:**

பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளை நினைவுகூரும் தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு 'விக்சித் பாரத் (வளர்ச்சி அடைந்த இந்தியா) இளம் தலைவர்கள் உரையாடல் 2026' நிகழ்ச்சி டெல்லி பாரத் மண்டபத்தில் ஜனவரி 9-ம் தேதி தொடங்கியது.

இதன் இறுதி அமர்வு ஜனவரி 12-ம் தேதி (இன்று) நடைபெற உள்ளது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று இந்தியா மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த 3,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களுடன் கலந்துரையாட உள்ளார். விக்சித் பாரத் இளம் தலைவர்கள் கலந்துரையாடல் 2026- பதிப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்கள் பிரதமரிடம் 10 கருப்பொருள் பிரிவுகளில் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்துவார்கள்.



தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் தங்கள் கண்ணோட்டங்கள் மற்றும் செயல்படுத்தக்கூடிய யோசனைகளை பகிர்ந்துகொள்வார்கள். இந்தியாவின் வளர்ச்சிக்கான முன்னுரிமைகள் மற்றும் தேசத்தை கட்டியெழுப்புவதற்கான நீண்டகால இலக்குகள் குறித்து இளம் பங்கேற்பாளர்களால் எழுதப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளை கொண்ட 'விக்சித் பாரத் இளம் தலைவர்கள் கலந்துரையாடல் 2026-க்கான கட்டுரைத் தொகுப்பை' பிரதமர் வெளியிடுவார்.

'விக்சித் பாரத் இளம் தலைவர்கள் உரையாடல்' என்பது இந்தியாவின் இளைஞர்களுக்கும் தேசிய தலைமைக்கும் இடையிலான ஒரு கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடலை எளி தாக்குவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தேசிய தளமாகும்.


பிரதமர் நரேந்திர மோடியின் சுதந்திர தின உரையின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முதல் பெண் ஆட்டோ டிரைவரை சுட்டுக் கொன்ற முன்னாள் கணவர்

## உத்தர பிரதேசத்தில் வேறு ஒருவரை திருமணம் செய்ததால் விபரீத செயல்

**ஜான்சி,ஜன.12:**

உத்தர பிரதேசத்தின் ஜான்சி நகரின் முதல் பெண் ஆட்டோ டிரைவரை அவரது முன்னாள் கணவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார். அவரை போலீஸார் சுட்டு பிடித்தனர்.





உத்தர பிரதேசத்தின் ஜான்சி நகரைச் சேர்ந்தவர் அனிதா சவுத்திரி(40). இவர் கடந்த 2021-ம் ஆண்டு முதல் ஆட்டோ ரிக்ஷா ஓட்டி வந்தார். இவர் முகேஷ் ஜா என்பவரை 7 ஆண்டுகளுக்கு முன் திருமணம் செய்தார்.

பின்னர் முகேஷ் ஜாவை விட்டு அனிதா சவுத்திரி பிரிந்து வேறு ஒரு நபரை திருமணம் செய்தார். அனிதா சவுத்திரிக்கு 3 குழந்தைகள் உள்ளனர். இரவு நேரத்தில் அவர் ஆட்டோ ஓட்டி தனது குடும்பத்தினருக்கு உதவி வந்தார். ரயில்வே நிலையத்திலிருந்து பயணிகளை அழைத்து செல்வதை அவர் வழக்கமாக மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அவர் ரயில் நிலையம் அருகே துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரை முன்னாள் கணவர் முகேஷ் ஜா கொலை செய்திருக்கலாம் என அனிதாவின் கணவர் மற்றும் அனிதாவின் சகோதரி வினிதா ஆகியோர் போலீஸாரிடம் புகார் தெரிவித்தனர்.

இதனடிப்படையில் முகேஷ் ஜாவின் நண்பர்கள் மனோஜ் ஜா மற்றும் சிவம் ஜா ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். தலைமறைவான முகேஷ் ஜாவை போலீஸார் தேடி வந்தனர். இந்நிலையில் அவரது கார் பெத்வா நதியின் நாட்காட் பாலம் அருகே நின்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் பகவான்புத்ரா மற்றும் கர்கான் சாலையில் முகேஷ் ஜா சென்று கொண்டிருப்பதை போலீஸார் பார்த்தனர்.

அவரை நிறுத்த முயன்றபோது, முகேஷ் ஜா, போலீஸார் மீது தனது கைத்துப்பாக்கியால் சுட்டார். இதையடுத்து போலீஸார் நடத்திய பதில் தாக்குதலில் முகேஷ் ஜாவின் காலில் குண்டு பாய்ந்தது. அவரை சிகிச்சைக்காக மருத்துவமனையில் போலீஸார் சேர்த்துள்ளனர். அவரிடமிருந்து துப்பாக்கி மற்றும் குண்டுகளை போலீஸார் பறிமுதல் செய்தனர். "அனிதா சவுத்திரி தன்னைவிட்டு பிரிந்து சென்றதை தாங்கி கொள்ள முடியவில்லை. என்னை அவர் ஏமாற்றியதால், அனிதாவை சுட்டுக் கொன்றேன்" என போலீஸாரிடம் முகேஷ் ஜா கூறினார்.

# ஏழுமலையான் கோயிலில் இஸ்ரோ தலைவர் சுவாமி தரிசனம்


**திருமலை,ஜன.12:**



திருமலையில் நேற்று காலை விஐபி பிரேக் நேரத்தில் இஸ்ரோ தலைவர் நாராயணன் ஏழுமலையானை தரிசனம் செய்தார். அப்போது, நாளை ஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட உள்ள பிஎஸ்எல்வி - சி62 விண்கலத்தின் மாதிரியை ஏழுமலையானின் பாதங்களில் வைத்து சிறப்பு பூஜை செய்தார்.

இக்குழுவினருக்கு திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகிகள் தீர்த்த பிரசாதம் வழங்கி கவுரவித்தனர். சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் இருந்து நாளை 10.17 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட உள்ள இந்த விண்கலத்துடன் பூமியை ஆய்வு செய்ய இஓஎஸ் - என் - 1 துணை விண்கலத்தை அனுப்ப உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாண்டியர்களை தேடி வரலாற்று குழு ஒருங்கிணைப்பாளர் நூல் வழங்கும் நிகழ்ச்சி




**மதுரை, ஜன. 12:** பாண்டியர்கள் தேடி பயணம் அனைத்து மறவர் நலக் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ஐயா. விஜயகுமார்க்கு திருவிதாங்கூர் ராணியும் பத்ம ஸ்ரீ விருது பெற்றவருமான அஸ்வதி திருநாள் கௌரி லட்சுமி பாய் எழுதிய *"History Liberated : The Sree Chithra"* என்ற முக்கியமான வரலாற்று நூல், பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு ஒருங்கிணைப்பாளர் சு. மணிகண்டன் மரியாதையுடன் வழங்கப்பட்டது.

வரலாற்றை அறிந்து, அடையாளங்களை மீட்டெடுக்கும் இந்த முயற்சிக்கு துணை நிற்கும் அனைத்து உறவுகளுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## விவேகானந்தர் ஆன்மீக சேவை விருது





விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் கோவில் மூன்றாம் தலைமுறையை சேர்ந்த கோவில்பூசாரி கே.ஆர் சீனுவாசன் அவர்களுக்கு ஆன்மீக சேவையை பாராட்டி இளங்குரல் பவுண்டேஷன் சார்பில் விவேகானந்தர் ஆன்மீக சேவை விருது சென்னையில் வழங்கப்பட்டது. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

### இளையான்குடியில்

## சமத்துவ பொங்கல் தமிழரசி எம்எல்ஏ பொங்கல் வைத்து கொண்டாடினார்






**மானாமதுரை, ஜன.12:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் தி.மு.க., நகர இளைஞ ரணி சார்பில் சமத்துவ பொங்கல் விழா பேரூராட்சி தலைவர் நகர் செய லாளர் நஜூமுதீன் தலைமையிலும், வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் எம்எல்ஏ சுப. மதியரசன்,கிழக்கு ஒன்றிய செயலாளர் தமிழ்மாறன் மற்றும் தாளாளர் காதர் பாட்சா, பேரூராட்சி துணைத் தலைவர் இப்ரா ஹிம் முன்னிலையிலும் நடைபெற்றது. மானாமதுரை எம்.எல்.ஏ.. தமிழரசி பொங்கல் வைத்து மக்களுக்கு வேட்டி, சேலை வழங்கினார்.

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, கூட்டுறவு. கடன் சங்க முன்னாள் தலைவர் சுப தமிழரசன், நிர் வாகிகள் கண்ணன், சிவனேசன், கருணாகரன் கலந்து கொண்டனர்.

### பாபநாசம் அருகே பண்டாரவாடையில்

## விவசாயிகள் சங்கம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா

### தஞ்சை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் பங்கேற்பு



**தஞ்சாவூர் , ஜன.12:** தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே பண்டாரவாடை ஊராட்சியில் பார்வதிபுரம் கிராமத்தில் தமிழக நலிவுற்ற விவசாயிகள் சங்கம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

மாநில தலைவர் முகம்மது இப்ராஹிம் தலைமை வகித்தார்.

விழாவில் தஞ்சை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ராஜாராம் கலந்து கொண்டு சமத்துவ பொங்கல் விழாவினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

விழாவில் பாபநாசம் போலீஸ் துணை கண்காணிப்பாளர் முருகவேலு, தஞ்சாவூர் தோட்டக்கலை துணைத் தலைவர் வெங்கட்ராமன், மாவட்ட தலைவர் ஜெயக்குமார், இயற்கை விவசாயி உதய்குமார், விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கோவிந்தராஜ், பழனியப்பன், ரவிச்சந்திரன், செந்தில்குமார், அருணாச்சலம், பாபநாசம் ஒன்றிய பொருளாளர் ரவிச்சந்திரன்,திமுக நிர்வாகிகள் ராயல்அலி ,தமிழ்வாணன், அசோகன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். முடிவில் வாழை விவசாயி சங்கர் நன்றி கூறினார்.

**பாபநாசம் செய்தியாளர் ஆர்.தீனதயாளன்**

### வலங்கைமான் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்

## மாணவிகளின் தேவைக்கு ஏற்ப கூடுதல் குடிநீர் தண்ணீர் தொட்டி திறப்பு விழா



**வலங்கைமான் , ஜன.12:** வலங்கைமான் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளின் தேவைக்கு ஏற்ப கூடுதல் குடிநீர் தண்ணீர் தொட்டி திறப்பு விழா நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் மகாகவி பாரதியார் நூற்றாண்டு நினைவு அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளின் நலன் கருதி கூடுதலாக ஒரு தண்ணீர் தொட்டி அமைத்து தர பள்ளியின் சார்பில் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அதன்படி ரூபாய் 25 ஆயிரம் மதிப்பீலான குடிநீர் தண்ணீர் தொட்டியினை பாடகச்சேரி முன்னாள் கிராம காங்கிரஸ் தலைவர் மறைந்த எம். பொன்னுசாமி வாண்டையார் நினைவாக அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் எக்ஸ் ஆர்மி மேஜர் ஜெனரல் பி.சேகர் தனது குடும்பாத்தாருடன் இணைந்து பள்ளிக்கு அர்ப்பணித்தார்கள்.

நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியை பிரேமா, பாடகச்சேரி ஓய்வு பெற்ற காவல்துறை உதவி ஆய்வாளர் ஸ்ரீதரன், பாஸ்கரன், மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் வலஙகை ஆசிரியர் எஸ்.சம்பந்தம், வலங்கைமான் வட்டார காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி, நகர காங்கிரஸ் தலைவர் ராஜு, நகர பொருளாளர் சபாநாயகம், காங்கிரஸ் மூத்த உறுப்பினர் மருதமுத்து மற்றும் ஆசிரியர், ஆசிரியைகள், மாணவிகள் கலந்து கொண்டனர்.

## திட்டக்குடி அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் 326 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள்

### அமைச்சர் சி.வெ. கணேசன் வழங்கினார்



**கடலூர், ஜன.12:** திட்டக்குடி அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியில் அமைச்சர் சி.வெ.கணேசன் 326 மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கினார்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரியை சேர்ந்த 326 மாணவ மாணவிகளுக்கு ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மடிக்கணினிகளை தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் மணிகண்டன், ஒன்றிய செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம், நகர செயலாளர் பரமகுரு, நகர துணை தலைவர் செந்தில்குமார், அயலக அணி அமைப்பாளர் சேதுராமன், நகர மன்ற உறுப்பினர் கொளஞ்சியப்பன், அனைத்து துறை கல்லூரி பேராசிரியர்கள், அலுவலர்கள், மாண மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முடிவில் கல்லூரி நூலகர் லட்சுமிசங்கரி நன்றி கூறினார்.

### மானாமதுரை

## பொங்கல் பண்டிகைக்காக மண் அடுப்புகள் செய்யும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது



**மானாமதுரை, ஜன. 12:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் அதிக அளவில் மண்பாண்ட பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் மண் பானைகள் உறுதி மிக்கது என்பதால் தமிழகம் முழுவதும் பொதுமக்கள் மானாமதுரை மண்பாண்ட பொருள்களை விரும்பி வாங்குவார்கள். இங்கு ஆண்டுதோறும் சீசனுக்கு ஏற்ப்ப மண் பாண்டகள் தயார் ஆகும்.

மானாமதுரை மண்பாண்டம் பொருள்களும் புவிசார் குறியீடு கிடைத்துள்ளதால் தற்போது அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் அனுப்ப படுகிறது.

தற்போது பொங்கல் சீசன் என்பதால் மண் அடுப்புகள் பொங்கல் பானைகள் மானாமதுரை மண்பாண்டம் தொழிற்கூடம் மற்றும் சிவகங்கை ரோடு, உடை குளம் பகுதியில் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

அதைத் தொடர்ந்து பிப்ரவரி மாதத்தில் கோவில் திருவிழா முன்னிட்டு அக்கினி சட்டி, சுவாமி பொம்மைகள் தயாரிக்கும் பணிகள் நடைபெறும்.

## புத்தகக்கண்காட்சி விழா



**மணமேல்குடி, ஜன.12:** குலச்சிறையார் நர்சரி & பிரைமரி பள்ளி,மணமேல்குடி மற்றும் நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., இணைந்து புத்தகக்கண்காட்சி விழா நடத்தினர்.அதில் ஜெகதீஸ்வரா மற்றும் குலச்சிறையார் பள்ளி தாளாளர்.திரு. G.கார்தீஸ்வரன் BE.,MBA.,LLB.,B.Ed அவர்கள் புத்தகக்கண்காட்ச்சியை தொடங்கி வைத்தார்.

ஜெகதீஸ்வரா பள்ளி முதல்வர் நல்லாசிரியர். திரு. V.நரேஷ்குமார் MA.,M.Sc.M Sc.,(Psy)M.Ed.,M.Phil. அவர்கள் தலைமையில் மற்றும் குலச்சிறையார் நர்சரி & பிரைமரி பள்ளி முதல்வர் திருமதி.M.ஜனனி மாணிக்கராஜன் MA.,M.Ed., அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. உடன் திருமதி.R.பானுப்பிரியா M.Sc.,B.Ed(vice principal), பள்ளி ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் குழந்தைகளும் புத்தகக் கண்காட்சி -யை கண்டு கழித்தனர். புத்தக கண்காட்சி 09-01-2026மற்றும் 10-01-2026 ஆகிய இரு தினங்களில் நடைபெற்றது.

## அவர்தானே சி.பி.ஐ. கேட்டார்; ஆஜராகி வரட்டும்' விஜய் டெல்லி பயணம் குறித்து குஷ்பு கருத்து!



**சென்னை, ஜன.12:** சென்னை விமான நிலையத்தில் பா.ஜ.க. நிர்வாகி குஷ்பு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம் ஜன நாயகன் தணிக்கை விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,

"பராசக்தியை ரெட் ஜெயண்ட் ஃபிலிம்ஸ் ரிலீஸ் செய்துள்ளது. மத்திய அரசு தடைசெய்யவேண்டும் என்றால், ரெட்ஜெயண்ட் படத்திற்குத்தான் தடைவிதித்திருக்க வேண்டும். ஏனெனில் எங்களுக்கு எதிரி திமுகதான். ஜன நாயகன் குறித்து பேசுபவர்கள் மூளையில் இருக்கும் அறிவைப் பயன்படுத்தமாட்டார்களா? குழந்தை அழுதால்கூட மோடியை காரணம் கூறுபவர்களை என்ன சொல்வது என்று தெரியவில்லை.

படத்திற்கான அனைத்து சான்றிதழ்களையும் பெற்றபின்தான் ரிலீஸ் தேதியை அறிவிக்கவேண்டும். அதுதான் அடிப்படை விதி. இது தயாரிப்பாளர்களின் தவறு. பின்னர் மத்திய தணிக்கை வாரியத்தை தவறு கூறாதீர்கள். கிறிஸ்துமஸ், புத்தாண்டு என விடுமுறை நாட்கள் இடையில் இருந்துள்ளன. எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு, அவர்கள் 24 மணிநேரமும் உங்களுக்காக வேலைசெய்ய வேண்டுமா? ஒரு ரசிகையாக எனக்கும் ஜனநாயகன் ரிலீஸ் ஆகாதது குறித்து வருத்தம் உள்ளது. ஆனால் விதிமுறைகள் எப்பொழுதும் மாறாது. இது அனைத்து படங்களுக்கும் பொருந்தும். குறைக்கூறுவதற்கு முன் யோசியுங்கள். " என தெரிவித்தார்.

தொடர்ந்து சிபிஐ விசாரணைக்கு நாளை விஜய் ஆஜராவது குறித்த கேள்விக்கு,

கரூர் பிரச்சனை எழுந்தபோது முதலில் சிபிஐ விசாரணை கோரியது யார்? நாங்கள் கேட்டோமா? முதலில் சிபிஐ விசாரணை வேண்டும் என்று கேட்டது விஜய்தான்.

அவர்மீது தவறு இல்லை இல்லையா? முழுக்க முழுக்க திமுகவைதானே குறைக்கூறினார். அவர் கேட்டார்; விசாரணை நடக்கிறது; அவர் ஆஜராகிவிட்டு வருவார். என தெரிவித்தார்.

## பொங்கலை ஒட்டி பெண்களுக்கு இனிப்பான செய்தி - அமைச்சர் ஐ.பெரியசாமி




**சென்னை, ஜன.12:** வரும் 15 ஆம் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்நிலையில், நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, "பொங்கல் கொண்டாட்டம் முடிவதற்குள் பெண்களுக்கு இனிப்பான செய்தியை முதலமைச்சர் வெளியிட உள்ளார். விடுபட்ட தகுதியுள்ள மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

ஒருவேளை கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை 1000 ரூபாயில் இருந்து 2000 ரூபாயாக அரசு உயரத்தப்போவதை தான் அமைச்சர் குறிப்பிடுகிறாரோ என்று இணையத்தில் அமைச்சரின் கருத்து வைரலாகியுள்ளது.

நிகழ்ச்சி முடிந்த பின்பு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி, "ஆட்சி, அதிகாரத்தில் பங்கு கேட்பது அவர்களது உரிமை. ஆனால், எப்போதும் தனித்துதான் திமுக ஆட்சி அமைக்கும் கூட்டணி ஆட்சி கிடையாது என்பதில் முதலமைச்சர் உறுதியாக உள்ளார்" என்று தெரிவித்தார்.


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


PRGI. TNBIL/25/A1569
பேப்பர்பாய்
தமிழகம் மற்றும் புதுவையில் அனைத்து
தாலுகா-க்களிலும்
செய்தியாளர்கள் தேவை. பத்திரிகை
துறையில் ஆர்வமும் துடிப்பும்
உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.
Call: 7789941009
eMail: paperboynewspaper@gmail.com
www.paperboy.biz


FLAT FOR SALE
PONMAR
STONE & ACRES
FLORA
2 BHK
INDEPENDENT
FLOOR - 1033 Sq.ft
99401 55588


NEWLY
CONSTRUCTED
A GRADE
INDUSTRIAL
WAREHOUSE
available on
Lease at TADA,
Near Sri City, A.P
• Approx 1.15 lakh sq.ft.
• Ample parking place for lorries and cars
• Warehouse on main NH5 express high way having direct approach on high road
• Close vicinity to 3 ports and Sri City
• Construction as per "A" Grade warehouse norms
98402 97142


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்..
www.arultharumdeivam.com
Manjal Mart
ORDER
NOW
CALENDAR
MANJALMART.COM
RS.100
9337501889
7789941009


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE


உடனடி விற்பனை
திருவள்ளூர் அடுத்த மணவாளநகர்
தேசிய நெடுஞ்சாலை
மெயின் ரோட்டில்
26,0000 Sq.ft
(காம்பவுண்ட் உள்ளது)
6000 Sq.ft பில்டிங்
DTCP APPROVED
98400 24841


Vilambaram
WE HELP YOU TO
BOOST
YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599


முனீஸ்வர் துணை
RG
கங்கோதரி
எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.


RG
GANGOTHARI
ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377 , 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை
பொருள்களை குறைந்த விலையில்
நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
* Car Foam Pressure Wash
* Teflon Coating
* Ceramic Wax Treatment
* Under Chassis Painting
* Interior Foam Wash / Stain Remover
* Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
999 ONLY


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..



S.R
Call Drivers
Travels
Man Power & All Vehicle Available
24 Hours
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS. 999/-
Call/Whatsapp - +91 7789951009

## கவிதை அரங்கம்!





மன பலம் ஒன்றே
முயலாத காரியத்தையும்
செய்ய முடியுமென
ஊக்கம் அளிக்கும்


என்றும் அழகானது
தோல்வியை முறியடிக்கும்
வெற்றியே

ஒரு மனிதன் விழாமலே
வாழ்ந்தான் என்பது

பெருமை அல்ல
வீழ்ந்த போதெல்லாம்
எழுந்தான் என்பதே
பெருமை

காயங்களை சுமந்தவன்
கனவுகளை
இழுப்பதில்லை
கண்ணீருடன் இருப்பவன்
கனவுகளை
வெறுப்பதில்லை

## வாழ்க்கை தத்துவம்...




வார்த்தைகளின்
எல்லைகளை பொருத்தே
உறவுகளின் ஆயுட்காலமும்
அதிகரிக்கும்

பொய்க்கு
வேகம் அதிகம்
ஆயுள் குறைவு
உண்மைக்கு
வேகம் குறைவு
எப்போதும் மறைவது இல்லை

உபதேசம் செய்யாதே
உதாரணமாய் இரு
ஊரைப் பழிக்காதே
உன்னை மாற்றிக்கொள்

படிப்பறிவை விட
மேலானது
வாழ்க்கையில் சிலரால்
படும் அறிவு

## நியாயமா நித்யா?



அந்த உயிர்க்கொல்லி நோய் தொற்று உலகையே ஆட்டிக் கொண்டிருந்த நேரம்.மருத்துவத்துறையினர் அனைவரும் பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தனர்.

வழக்கத்தைவிட வேலை அதிகம், நேரமாகிவிட்டதால் அவசர அவசரமாக கிளம்பிக் கொண்டிருந்தாள் நித்யா. தட்டில் உப்புமாவை போட்டு சாப்பிட்டு கொண்டே அத்தையின் அருகில் வந்தாள்,
"அத்தை! முரளி வீட்டுக்குப் போகணும்னு சொன்னீங்களே! "

"நான் எங்க நித்யா சொன்னேன்? இப்ப எதுக்கு முரளி வீட்டுக்கு? அதுவும் இந்த மாதிரி சூழ்நிலைல... எல்லாரும் நோய் தொற்று பயத்துல இருக்கும் போது"

"அதனால என்ன அத்தை? முரளி என்ன தள்ளியா இருக்கார்... இதோ அரைமணிநேரம் தூரத்தில் தான் இருக்காரு.. உங்க மகனே பத்திரமாக காரில கொண்டு போய் விட்டுடுவார்."

நித்யா பேசப்பேச, அப்பா அம்மா முகம் வாடி போவதை கவனித்தான் மகேஷ். இவளுக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி அப்பா, அம்மா மனம் நோக பேசுகிறாள் என நினைத்தான் மகேஷ்.

நித்யா வேலைக்கு கிளம்பிப் போய்விட்டாள். அப்பா, அம்மா அருகில் வந்து அமர்ந்த மகேஷ்,

"அம்மா! நீங்க ஒண்ணும் தப்பா நினைச்சுக்காதீங்க! வேலை கொஞ்சம் அதிகமா இருக்கிறதால அலுப்புல பேசுறா.. டியூட்டிக்கு போக வேண்டியிருக்குல "என்று சமாதானப் படுத்தினான்.

"இல்லப்பா! நாங்க உன் தம்பி வீட்டுக்குப் போறோம்.. எங்கள கொண்டு விட்டுடு"

"அம்மா! சொன்னா கேளுங்க... முரளி வீடு சின்னது. பிள்ளைங்க ரெண்டும் ஸ்கூல் இல்லாததால வீட்டில இருக்காங்க... அங்க உங்களுக்கு வசதியா இருக்குமா?
"பரவாயில்லப்பா! கொஞ்ச நாள் அங்கேயே இருக்குறோம் அட்ஜஸ்ட் பண்ணிக்குவோம்!" என்றார் அப்பா பிடிவாதமாக. அப்பா, அம்மா மனம் வருத்தத்தில் இருப்பது புரிந்தது. வேறு வழியில்லாமல், இருவரையும் தம்பி வீட்டில் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தான் மகேஷ்.

மாலை நித்யா வீடு திரும்ப.."இப்ப உனக்கு சந்தோஷம்தானே நித்யா? வேலைக்கு ஆள் வராதபோதும், அவங்களால முடிஞ்ச உதவியை செஞ்சுகிட்டு தானே இருந்தாங்க. அவங்கள துரத்தி விட்டுட்டு நிம்மதியா இரு!" என்றான் கோபத்தோடு.

"என்னங்க இது! புரியாம பேசுறீங்க! தினமும் ஹாஸ்பிடல் போக வேண்டியிருக்கு. எக்ஸ்போஷர் இருக்கிறதுனால, பெரியவங்க வீட்ல இருக்காங்க என்பதே ஒரு டென்ஷனா இருக்கு. அவங்க இங்கே இருக்கறதை விட முரளி வீட்ல இருக்கிறது பாதுகாப்பு .மேலும் எனக்கு எந்த நேரமும் முழு நேர டியூட்டி போடலாம். ரெண்டு வாரம் வீட்டில் இருக்க மாட்டேன். ஆளில்லாம அத்தை இந்த வீட்ல கஷ்டப்படுவாங்க.

அங்கே முரளி வீட்ல அமுதா வேலையை பாத்துக்குவா. அவங்களுக்கு அதிக சிரமம் இருக்காது.

ஒவ்வொரு நாளும் ஹாஸ்பிடல் போயிட்டு வரும்போது வயசானவங்க வீட்ல இருக்காங்கன்னு நினைப்பு ஓடிகிட்டே இருக்கு. இந்த விபரத்தை சொன்னா அவங்க முரளி வீட்டுக்கு போக மாட்டாங்க. நமக்கு உதவியாய் இருக்கணும்னு நினைப்பாங்க. அதாங்க கொஞ்சம் கடுமையாக பேசிட்டேன் பின்னால அவங்கள விஷயத்த சொல்லி சமாதானப்படுக்கலாம் " என்றாள் டாக்டர் நித்யா.

அவளைப் புரிந்து கொள்ளாமல், தவறாக நினைத்து விட்டோமே என மனம் வருந்தினான் மகேஷ்

**தி.வள்ளி**
திருநெல்வேலி.

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*போடா, நீ முட்டாள் !*

*குமாஸ்தா : போடா, நீ முட்டாள் !*

*டைப்பிஸ்ட்: போடா, நீ தான் முட்டாள் !*

*மேனேஜர்: என்ன அங்கே கூச்சல்? நான் ஒருத்தன் இங்கே இருப்பது உங்களுக்கு தெரியலையா ?*



## தினம் ஒரு சமையல்



### கடலை மாவு சாம்பார்

தேவையான பொருட்கள்:

1. பெரிய வெங்காயம் - ஒன்று
2. தக்காளி - ஒன்று
3. பச்சை மிளகாய் - இரண்டு
4. கடலை மாவு - ஒரு டேபிள் ஸ்பூன்
5. இஞ்சி பூண்டு - ஒரு டேபிள் ஸ்பூன்
6. மஞ்சள் தூள் - அரை டீஸ்பூன்
7. மிளகாய் தூள் - ஒரு டீஸ்பூன்

தாளிக்க தேவையானவை:

1. கடுகு உளுந்தம் பருப்பு -1 ஸ்பூன்
2. கருவேப்பில்லை -தேவையான அளவு


செய்முறை:



1. முதலில் வெங்காயம் ,தக்காளி மற்றும் பச்சை மிளகாய் பொடியாக நறுக்கிக்கொள்ளவும் . பின்பு இஞ்சி பூண்டை நசுக்கி வைத்துக் கொள்ளவும். பின்பு கடலை மாவை அரை கப் தண்ணீரில் கரைத்து வைத்துக் கொள்ளவும்.பின்பு ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி அதில் தாளிக்க கொடுத்துள்ள பொருட்களை போட்டு தாளித்து கொள்ளவும்.தாளித்த பின்பு அதில் பச்சை மிளகாய்,வெங்காயத்தை போட்டு நன்கு வதக்கிக் கொள்ளவும்.வதக்கிய பின்பு அதில் நசுக்கி வைத்த இஞ்சி பூண்டு விழுது மற்றும் தக்காளியை போட்டு வதக்கிக் கொள்ளவும்.

2. வதக்கிய பின்பு அதில் மஞ்சள் தூள்,மிளகாய் தூள் ,உப்பு மற்றும் கரைத்து வைத்துள்ள கடலை மாவை அதில் ஊற்றி சிறிது நேரம் கொதிக்க விட்டு இறக்கவும். கடலை மாவு சாம்பார் தயார். குறிப்பு: கடலை மாவு ஊற்றி பின்பு சிறிது நேரம் கொதிக்க விட்டு இறக்கி கொள்ளவும் இல்லையென்றால் சாம்பார் கெட்டியாக வரும்.

## நீர்முள்ளி பயன்கள்



KOKILAKSHA என்னும் மூலிகை தமிழிலும் மலையாளத்திலும் நீர்முள்ளி என்று அழைக்கப்படுகிறது. ஆயுர்வேதத்தில் இந்த நீர்முள்ளி மூலிகை வாய்வுத் தொல்லை, சிறுநீரகக் கோளாறுகள், எலும்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு கொடுக்கப்படும் மருந்துகளில் முலப்பொருளாகப் பயன்டுத்தப்படுகிறது. இந்த நீர்முள்ளியின் விதை, இலை, பூ அனைத்தும் மருத்துவ குணம் கொண்டது. இதை எதற்கெல்லாம் பயன்படுத்தலாம், அதிகமாக பயன்படுத்தினால் ஏற்படும் பக்க விளைவுகள் என்ன ஆகியவை பற்றி விளக்கமாகப் பார்க்கலாம்.
HEALTH BENEFITS OF NEER MULLI

ஈரமான பகுதிகள், நெல் வயல்கள், ஏரி, குளங்கள் உள்ள பகுதிகளில் இந்த நீர்முள்ளி அதிகமாகக் காணப்படும். ஆன்டி இன்பிளமேட்டரி, ஆன்டி டயாபடீக், புற்றுநோய் எதிர்ப்பு பண்புகள் கொண்டது. ஆன்டி ஆக்சிடண்ட்டுகளும் இதில் அதிகம். இந்த நீர்முள்ளி தாவரம் நம் உடல் ஆரோக்கியத்தில் செய்யும் அற்புத மாற்றங்கள் பற்றி நாமும் தெரிந்து கொள்ளலாம் வாங்க... HEALTH BENEFITS OF NEER MULLI

ஆண்மை குறைபாட்டை சரிசெய்யும் நீர்முள்ளி

நீர்முள்ளிச் செடியில் இருந்து கிடைக்கும் விதை ஆண்களுக்கு உண்டாகும் மலட்டுத் தன்மை, குழந்தைப் பேறின்மை ஆகிய பிரச்சினைகளைச் சரிசெய்யப் பயன்படுத்தப்படுகிறது.

இது டெஸ்டோஸ்டிரோன் ஹார்மோன்களையும் விந்தணு உற்பத்தியையும் அதிகப்படுத்துகிறது. இதனால் ஆண்மைக் குறைபாட்டை சரிசெய்து வளமான விந்தணுக்களை உற்பத்தி செய்ய உதவுகிறது.

RHEUMATOID ARTHRITIS என்பது நாள்பட்ட இன்பிளமேஷனால் ஏற்படும் பிரச்சினை. உலகம் முழுவதும் ஆண்களைக் காட்டிலும் பெரும்பாலான நடுத்தர வயது பெண்கள் இந்த வகை இன்பிளமேஷன்களால் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள்.

இந்த நீர்முள்ளி இலை மற்றும் விதையின் பொடியை எடுத்துக் கொள்வதால் இதிலுள்ள ஆன்டி இன்பிளமேட்டரி பண்புகள் RHEUMATOID ARTHRITIS முடக்குவாதத்தின் அறிகுறிகளை வெகுவாகக் குறைக்கின்றன. அதோடு ஹீமோகுளோபின் எண்ணிக்கையையும் அதிகரிக்கிறது.

## சினிமா

## டிமாண்டி காலனி 3 படத்தை வாங்கிய ஜீ நிறுவனம்.. அதுவும் இத்தனை கோடி கொடுத்தா!!



அஜய் ஞானமுத்து இயக்கத்தில் உருவாகி கடந்த 2015ம் ஆண்டு வெளிவந்து அனைவரையும் மிரள வைத்த திரைப்படம் டிமாண்டி காலனி. இப்படத்தில் அருள்நிதி ஹீரோவாக நடித்திருந்தார்.

முதல் பாகத்தின் வெற்றியை தொடர்ந்து கிட்டத்தட்ட 9 ஆண்டுகளுக்கு பின், டிமாண்டி காலனி 2 வெளிவந்தது. ஆம், கடந்த 2024ஆம் ஆண்டு டிமாண்டி காலனி 2 திரைப்படம் வெளிவந்து மக்களிடையே அமோக வரவேற்பை பெற்றது.

இப்படத்தில் அருள்நிதி உடன் இணைந்து பிரியா பவானி ஷங்கர், அருண் பாண்டியன், மீனாட்சி கோவிந்தராஜன் ஆகியோர் நடித்திருந்தனர்.

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்த டிமாண்டி காலனி 3 திரைப்படத்தின் First லுக் போஸ்டர் சமீபத்தில் வெளிவந்தது. இதன்பின் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், பெரும் எதிர்பார்ப்புடன் வெளிவரவிருக்கும் டிமாண்டி காலனி 3 படத்தின் சாட்டிலைட் மற்றும் டிஜிட்டல் உரிமையை ஜீ நிறுவனம் வாங்கியுள்ளது.

அதுவும் ரூ. 50 கோடிக்கு வாங்கியுள்ளது என தகவல் தெரிவிக்கின்றனர்.

இது மிகப்பெரிய ரெகார்ட் என கூறப்படுகிறது.



ஜெயிலர் பட நடிகை மிர்னாவின் லேட்டஸ்ட் Stunning கிளாமர் போட்டோ ஷூட்..

## தள்ளிப்போன ஜனநாயகன்.. ரீ ரிலீஸ் ஆகும் விஜய்யின் ப்ளாக்பஸ்டர் படம்..




தணிக்கை சான்றிதழ் பிரச்சனை காரணமாக ஜனநாயகன் படம் ரிலீஸாகவில்லை. ஜனவரி 9ஆம் தேதி வெளிவரவிருந்த இப்படத்தை திரையில் கொண்டாட காத்திருந்த ரசிகர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஆனால், விரைவில் அனைத்து பிரச்சனைகளையும் முடிவுக்கு கொண்டு வந்த படம் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.


ஜனநாயகன் வெளிவரவில்லை என்கிற வருத்தம் ஒரு பக்கம் இருக்க, தயாரிப்பாளர் கலைப்புலி எஸ். தாணு விஜய் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தாணு தயாரிப்பில் விஜய் நடித்து ப்ளாக்பஸ்டர் ஹிட்டான படங்கள் துப்பாக்கி மற்றும் தெறி. இதில் இயக்குநர் அட்லீ இயக்கத்தில் விஜய் நடித்து 2016ஆம் ஆண்டு வெளிவந்த தெறி படத்தை தற்போது 10 ஆண்டுகள் கழித்து ரீ ரிலீஸ் செய்யப்போவதாக தாணு அறிவித்துள்ளார்.

இந்த பதிவில், 'விரைவில் திரையில்' என குறிப்பிட்டுள்ளார். தெறி ரீ ரிலீஸ் குறித்து தாணு வெளியிட்டுள்ள இந்த பதிவு ரசிகர்கள் மத்தியில் படுவைரலாகி வருகிறது.

விரைவில் திரையில்

# வைகுண்ட ஏகாதசியின் சிறப்புகள்



மாதங்களில் நான் மார்கழி என்று ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் கூறினார் அப்படிப்பட்ட சிறப்பான மாதமான மார்கழியில் வரும் வளர்பிறை ஏகாதசி வைகுண்ட ஏகாதசி என்று அழைக்கப்படுகிறது ஏகாதசி என்பதற்கு பதினோராம் நாள் என்பது பொருள் ஞானேந்திரியங்கள் ஐந்து கர்மேந்திரியங்கள் ஐந்து மனம் ஒன்று ஆகிய பதினொன்றையும் பெருமாளுடன் ஐக்கிய படுத்தி தியானம் இருப்பதே ஏகாதசி தத்துவமாகும். மகாவிஷ்ணுவிற்கு உரிய விரதங்களில் ஏகாதசி விரதம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. வைகுண்ட ஏகாதசி நாளில் திருமாலின் இருப்பிடமான வைகுண்டத்தின் கதவுகள் திறக்கப்படுவதாக ஐதீகம். மார்கழி மாதத்தில் வரும் இந்த வளர்பிறை ஏகாதசிக்கு முக்கோடி ஏகாதசி என்ற பெயரும் உண்டு. இவ்வுலகில் உள்ளவர்கள் மட்டுமல்லது முப்பத்து முக்கோடி தேவர்களும் வைகுண்ட ஏகாதசி விரதம் இருந்து மகாவிஷ்ணுவை வழிபடுவர்.

இந்த ஏகாதசியுடன் இரண்டு அசுரர்களின் கதை உள்ளது, கிருத யுகத்தில் முரன் என்று ஒரு அசுரன் இருந்தான். அவன் தேவர்கள் உட்பட அனைவரையும் துன்புறுத்தினான். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மகாவிஷ்ணு முரனை சம்ஹாரம் செய்ய புறப்பட்டார். அவன் படைக்கலன்களை எல்லாம் அழித்த பகவான், அவன் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பம் தர எண்ணி பத்ரிகாசிரமத்தில் ஒரு குகையில் சென்று உறங்குவது போல் படுத்துக் கொண்டார். பகவானை தேடிக் கொண்டு வந்த முரன் பகவான் உறங்குவதாக நினைத்து அவரைக் கொல்ல எண்ணினான். அப்போது மகாவிஷ்ணுவின் திருமேனியில் இருந்து ஒரு அழகான பெண் ஆயுதங்களுடன் தோன்றி முரனைப் போருக்கு அழைத்தாள். பெண் என்று அலட்சியமாக நினைத்த முரன்," பெண்ணே! உன்னைக் கொல்ல ஒரு அம்பே போதும்", என்று அம்பை எடுக்க முனைந்த போது அந்தப் பெண் "ஹூம்" என்று ஒலி எழுப்பினாள். அந்தக்ஷணமே முரன் பிடி சாம்பல் ஆகிப்போனான்.

ஏதும் அறியாதவர் போல் கண் விழித்த மகாவிஷ்ணு தன் திருமேனியில் இருந்து வெளிப்பட்ட சக்தியை பாராட்டி அவளுக்கு ஏகாதசி என்ற பெயரையும் சூட்டினார் நீ தோன்றிய இந்நாளில் விரதம் இருந்து வழிபடுபவர்களுக்கு சகல செல்வங்களையும் அருள்வதுடன் முடிவில் வைகுண்ட பதவியும் கிடைக்கும் என்று அருளினார்.

மேலும் இந்த ஏகாதசி "மது, கைடபர்" என்னும் இரு அசுரர்களின் கதையோடு தொடர்புடையது. முற்காலத்தில் பிரம்மாவுக்கு ஏற்பட்ட கர்வத்தை ஒடுக்க நினைத்த மகாவிஷ்ணு தனது செவிகளில் இருந்து மது கைடபர்களை தோற்றுவித்தார். அவர்கள் பிரம்மாவை கொல்ல முயன்ற போது தடுத்த மகாவிஷ்ணு அவர்களிடம் பிரம்மாவை விட்டு விடும்படியும், அவ்வாறு செய்தால் அவர்களுக்கு வேண்டிய வரம் தருவதாகவும் கூறினார். ஆனால் அந்த அசுரர்கள் பகவானுக்குத் தாங்கள் வரம் தருவதாக கூறினர். மகாவிஷ்ணுவும் தன்னால் அவர்கள் இருவரும் வதம் செய்யப்பட வேண்டும் என்ற வரத்தைக் கேட்டார். அசுரர்களாக இருந்தாலும் தாங்கள் கொடுத்த வாக்கை நிறைவேற்ற விரும்பி, "அப்படியே எங்களை வதம் செய்யுங்கள். ஆனால், ஒரு சிறு விண்ணப்பம்! எங்களுடன் நீங்கள் ஒரு மாத காலம் யுத்தம் செய்ய வேண்டும். அதன் பிறகே நாங்கள் சித்தி அடைய வேண்டும்", என்று வேண்டினர். பகவானும் அப்படியே ஆகட்டும் என்றார். யுத்தத்தின் முடிவில் அவர்களை வீழ்த்தினார். மகாவிஷ்ணுவின் மகிமைகளை உணர்ந்த அசுரர்கள் பரமபதத்தில் நாங்கள் நித்திய வாசம் செய்ய வேண்டும் என்ற வரத்தை கேட்டனர். "மார்கழி மாத வளர்பிறை ஏகாதசி என்று பரமபதத்தின் வடக்கு வாசலைத் திறந்து அதன் வழியாக மது, கைடபர்களைப் பரமபதத்தில் சேர்த்துக் கொண்டார். அசுரர்கள் தாங்கள் பெற்ற இன்பத்தை இவ்வுலக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்று விரும்பி, "மார்கழி மாதம் வளர்பிறை ஏகாதசியன்று தாங்கள் எங்களுக்கு செய்த அனுக்கிரகத்தை, உன் ஆலயங்களில் உள்ள பரமபத வாசல் வழியாக வந்து உன்னை தரிசிப்பவர்களுக்கு மோட்சத்தை நல்க வேண்டும்," என்று வேண்டினர். அந்த வேண்டுகோளையும் அவர் ஏற்றார். வைகுண்ட ஏகாதசித் திருவிழா வைணவத்தின் தலைமை பீடமாகிய ஸ்ரீரங்கத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். வைகுண்ட ஏகாதசி நாளில் திருவரங்கக் கோயிலில் உள்ள பரமபத வாசல் (வடக்கு வாசல்) வழியாக ஆச்சாவதாரத்தில் பெருமாள் வெளியே வரும்போது தரிசிப்பவர்களுக்கும், அவர்கள் செய்த பாவத்தை எண்ணி வருந்தி அதை திருத்திக் கொள்பவர்களுக்கும் அரங்கன் முக்தி அளிப்பார்.

ஏகாதசி விரதம் இருக்கும் முறை ஏகாதசி விரதம் இருப்பவர்கள் தசமி அன்று பகலில் மட்டும் உணவு எடுத்துக்கொண்டு ஏகாதசியன்று உண்ணாமலும் உறங்காமலும் இருக்க வேண்டும் குளிர்ந்த நீர் குடிக்க தடை இல்லை ஏகாதசி நாட்களில் துளசி இலைகளை பறிக்கக்கூடாது. வைகுண்ட ஏகாதசி அன்று, இரவு கண் விழித்து பரமபதம் விளையாடுவது ஒரு முக்கியமான சம்பிரதாயமாக கருதப்படுகிறது. வாழ்வில் ஏற்ற இறக்கங்கள் நமது பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப கிடைக்கும் என்பதே இதன் கருத்து.

மறுநாள் துவாதசி என்று அதிகாலையில் குளித்து கோவிலுக்கு சென்று இறைவனை வணங்கிய பிறகு புளி இல்லாத உணவை உண்ண வேண்டும். உணவில் சுண்டைக்காய் நெல்லிக்கனி அகத்திக்கீரை சேர்த்து பற்களில் படாமல் ,"கோவிந்தா, கோவிந்தா, கோவிந்தா" என்று மூன்று முறை கூறி, ஆகாரம் எடுத்துக் கொண்டு விரதத்தை முடிக்க வேண்டும். ஏழைகளுக்கும் பசுக்கள், பிராணிகளுக்கும் உணவு வழங்க வேண்டும். துவாதசி என்று பகலில் தூங்கக் கூடாது. வயதானவர்களுக்கும் குழந்தைகளுக்கும் இதிலிருந்து விதிவிலக்கு உண்டு.

எல்லா வைஷ்ணவ திவ்ய தேசங்களிலும் வைகுண்ட ஏகாதசி, பரமபத வாசல் திறப்புடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். பூலோக வைகுண்டம் என்னும் ஸ்ரீரங்கத்தில் முக்கோடி ஏகாதசி 21 நாட்கள் சிறப்பாக கொண்டாடப்படும். அமாவாசைக்கு மறுநாள் பிரதமை அன்று தொடங்கும் பகல் பத்து, திருவத்யயன உற்சவம் அதாவது திருமொழித் திருநாள் என்றும், வைகுண்ட ஏகாதசியன்று இராப் பத்து அதாவது திருவாய்மொழி திருநாளும், பின் இயற்பா சாற்றுமுறையும் நடைபெறும். திருமொழி திருநாளில் நம்மாழ்வார் தவிர ஏனைய ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்த பாசுரங்களை, அர்ச்சுன மண்டபத்தில் அரையர் சேவையுடன் செவி சாய்க்கும் பெருமாள், இராப் பத்து உற்சவத்தின் போது நம்மாழ்வார் பாசுரங்ளை திருமாமணி மண்டபம் என்னும் ஆயிரம் கால் மண்டபத்தில் எழுந்தருளி செவி சாய்ப்பார்.

வைகுண்ட ஏகாதசிக்கு முதல் நாள் நம்பெருமாள் மோகினி அலங்காரத்தில் காட்சியளிப்பார் அன்று அரையர் சேவையில் திருப்பாற்கடலை கடைந்த வைபவம் அபிநயம் பிடிக்கப்படும்.

இந்த ஏகாதசி நன்னாளில் பரமபத வாசல் வழியாக ரத்தினங்கியில் நம் பெருமாள் வரும் போது "ரங்கா ரங்கா" என்ற கோஷம் விண்ணை பிளக்கும். ராப்பத்து எட்டாம் நாள் திருமங்கை மன்னன் வேடுபறியின் நடைபெறும். சாற்று முறை அன்று நம்மாழ்வார் மோட்சம், அதற்கு மறுநாள் இயற்பாசாற்று முறையுடன் முடிவு பெறும். இராப் பத்து நாட்களில் பரமபத வாசல் தினமும் பெருமாள் திருமாமணி மண்டபத்திற்கு எழுந்தருளும் போது திறக்கப்படும்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த வைகுண்ட ஏகாதசி இந்த வருடம் டிசம்பர் மாதம்30ஆம் தேதி, மார்கழி மாதம் 15ஆம் தேதி வருகிறது. இந்நன்னாளில் விரதம் இருந்து அனைவரும் மகாவிஷ்ணுவின் அருளுக்கு பாத்திரமாவோம். ஸர்வோ ஜனஹா சுகினோ பவந்து



-அலமேலு ரங்கராஜன்
எழுத்தாளர்

## தினம் ஒரு தலைவர்கள்

# சுசேதா கிருபளானி வரலாறு

சுசேதா கிருபளானி 25 ஜூன் 1908 1 டிசம்பர் 1974 ஒரு இந்திய அரசியல்வாதி மற்றும் சுதந்திர ஆர்வலர் ஆவார் . அவர் இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சராகவும் , 1963 முதல் 1967 வரை உத்தரபிரதேச அரசாங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார் .

ஆரம்ப கால வாழ்க்கை அவர் பஞ்சாபின் இப்போது ஹரியானாவில் உள்ளது) அம்பாலாவில் ஒரு பெங்காலி பிராஹ்ம குடும்பத்தில் பிறந்தார் . அவரது தந்தை சுரேந்திரநாத் மஜூம்தார், ஒரு மருத்துவ அதிகாரியாகப் பணிபுரிந்தார் , அந்த வேலைக்கு பல இடமாற்றங்கள் தேவைப்பட்டன. இதன் விளைவாக, அவர் பல பள்ளிகளில் பயின்றார் , அவரது இறுதிப் பட்டம் டெல்லியில் உள்ள செயிண்ட் ஸ்டீபன் கல்லூரியில் வரலாற்றில் முதுகலைப் பட்டம் ஆகும் .

நாட்டின் சூழல் தேசியவாத உணர்வுகளால் சூழப்பட்டு , சுதந்திரப் போராட்டம் உத்வேகம் பெற்று வந்த காலம் அது. அவள் ஒரு கூச்ச சுபாவமுள்ள குழந்தை, தன் தோற்றம் மற்றும் அறிவுத்திறன் குறித்து சுயநினைவு கொண்டவள் என்று அவள் தனது "முடிக்கப்படாத சுயசரிதை" புத்தகத்தில் சுட்டிக்காட்டுகிறாள் . அவள் வளர்ந்த வயதும் அவள் எதிர்கொண்ட சூழ்நிலைகளும் தான் அவளுடைய ஆளுமையை வடிவமைத்தன. 10 வயதில், தானும் தன் உடன்பிறந்தவர்களும் ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி தங்கள் தந்தையும் அவரது நண்பர்களும் பேசுவதைக் கேட்டதாக சுசேதா விவரிக்கிறார். இது அவர்களை மிகவும் கோபப்படுத்தியது, அவர்கள் விளையாடிய சில ஆங்கிலோ-இந்திய குழந்தைகள் மீது , அவர்களைப் பெயர் சொல்லி தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர். பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் அரசியலமைப்பு வரலாற்றுப் பேராசிரியராகப் பணிபுரிவதற்கு முன்பு, இந்திரபிரஸ்தா கல்லூரி மற்றும் பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் படித்தார் . 1936 ஆம் ஆண்டில், இந்திய தேசிய காங்கிரஸின் முக்கிய நபரான ஜே.பி. கிருபளானியை மணந்தார் , அவர் தன்னை விட இருபது வயது மூத்தவர். இந்த திருமணத்தை இரு குடும்பத்தினரும், காந்தியும் எதிர்த்தனர் , இருப்பினும் அவர் இறுதியில் விட்டுக்கொடுத்தார்.

சுதந்திர இயக்கம் மற்றும் சுதந்திரம்

அவரது சமகாலத்தவர்களான அருணா ஆசஃப் அலி மற்றும் உஷா மேத்தாவைப் போலவே, அவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது முன்னணியில் வந்து ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். பின்னர் பிரிவினை கலவரங்களின் போது மகாத்மா காந்தியுடன் நெருக்கமாகப் பணியாற்றினார். 1946 இல் அவர் அவருடன் நோகாலிக்குச் சென்றார். இந்திய அரசியலமைப்பு சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில பெண்களில் இவரும் ஒருவர். கான்பூர் தொகுதியிலிருந்து உத்தரபிரதேச மாநிலத்தின் முதல் பெண் முதல்வராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார், மேலும் இந்திய அரசியலமைப்பை உருவாக்கிய துணைக்குழுவின் ஒரு பகுதியாகவும் இருந்தார் . இந்திய அரசியலமைப்புக்கான சாசனத்தை வகுத்த துணைக்குழுவின் ஒரு பகுதியாக அவர் ஆனார். ஆகஸ்ட் 14, 1947 அன்று, நேரு தனது புகழ்பெற்ற " டெஸ்டினியுடன் ட்ரைஸ்ட் "






உரையை நிகழ்த்துவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பு, இவர் அரசியலமைப்பு சபையின் சுதந்திர அமர்வில் வந்தே மாதரம் பாடலைப் பாடினார் . 1940 இல் நிறுவப்பட்ட அகில இந்திய மகிளா காங்கிரஸின் நிறுவனர் ஆவார்.

சுதந்திரத்திற்குப் பிறகு

1949 ஆம் ஆண்டில் (இடமிருந்து வலமாக) உல்லா லிண்ட்ஸ்ட்ரோம் , பார்பரா கோட்டை , கெய்ரின் வில்சன் மற்றும் எலினோர் ரூஸ்வெல்ட் ஆகியோருடன் கிருபளானி .

சுதந்திரத்திற்குப் பிறகும், அவர் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டார். 1952 ஆம் ஆண்டு நடந்த முதல் மக்களவைத் தேர்தலில், அவர் புது தில்லியில் இருந்து KMPP டிக்கெட்டில் போட்டியிட்டார் : ஒரு வருடம் முன்பு தனது கணவர் நிறுவிய குறுகிய காலக் கட்சியில் சேர்ந்தார். அவர் காங்கிரஸ் வேட்பாளர் மன்மோகினி சாகலைத் தோற்கடித்தார் . ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் அதே தொகுதியிலிருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் இந்த முறை காங்கிரஸ் வேட்பாளராக. அவர் கடைசியாக 1967 ஆம் ஆண்டு உத்தரபிரதேசத்தில் உள்ள கோண்டா தொகுதியிலிருந்து மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார் . இதற்கிடையில், அவர் உத்தரபிரதேச சட்டமன்ற உறுப்பினராகவும் ஆனார் . 1960 முதல் 1963 வரை, அவர் உ.பி. அரசாங்கத்தில் தொழிலாளர், சமூக மேம்பாடு மற்றும் தொழில்துறை அமைச்சராக பணியாற்றினார். அக்டோபர் 1963 இல், அவர் உத்தரபிரதேசத்தின் முதலமைச்சரானார் , எந்தவொரு இந்திய மாநிலத்திலும் அந்தப் பதவியை வகித்த முதல் பெண்மணி. அவரது பதவிக் காலத்தின் சிறப்பம்சம் மாநில ஊழியர்களின் வேலைநிறுத்தத்தை உறுதியாகக் கையாண்டது. மாநில ஊழியர்களின் இந்த முதல் வேலைநிறுத்தம் 62 நாட்கள் தொடர்ந்தது. ஊழியர்களின் தலைவர்கள் சமரசம் செய்ய ஒப்புக்கொண்டபோதுதான் அவர் விலகினார். ஊதிய உயர்வுக்கான அவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதன் மூலம் கிருபளானி ஒரு உறுதியான நிர்வாகியாக தனது நற்பெயரைத் தக்க வைத்துக் கொண்டார். நிர்வாக முடிவுகள் மற்றும் கட்சி அமைப்பில் மூத்த தலைவர் நிர்மல் சந்திர சதுர்வேதி, எம்.எல்.சி., அவருக்கு ஆதரவளித்தார்.

1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பிளவுபட்டபோது, மொரார்ஜி தேசாய் பிரிவுடன் சேர்ந்து கட்சியை விட்டு வெளியேறி NCO ஐ உருவாக்கினார். 1971 தேர்தலில் பைசாபாத் (லோக்சபா தொகுதி) தொகுதியில் NCO வேட்பாளராக அவர் தோல்வியடைந்தார் . 1971 இல் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற அவர் 1974 இல் இறக்கும் வரை தனிமையில் இருந்தார்.

## டெல்லி அமைச்சர் மீது வழக்கு: போலீஸ் அதிகாரிக்கு டெல்லி சபாநாயகர் நோட்டீஸ்

**புதுடெல்லி, ஜன.12:**

டெல்லி சட்டப்பேரவை கூட்டம் கடந்த 6-ம் தேதி நடைபெற்றது. அப்போது, சீக்கிய குரு தேஜ் பகதூரை எதிர்க்கட்சித் தலைவர் ஆதிஷி அவமதித்ததாக பாஜக குற்றம் சாட்டியது. இது தொடர்பான வீடியோவை சட்ட அமைச்சர் கபில் மிஸ்ரா வெளியிட்டார்.

இதனிடையே ஆதிஷியின் வீடியோவை உள்நோக்கத்துடன் எடிட்டிங் செய்து போலி வீடியோவை வெளியிட்டதாக பஞ்சாப் போலீஸாரால் டெல்லி சட்ட அமைச்சர் கபில் மிஸ்ரா மீது எப்ஐஆர் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக டெல்லி சட்டப்பேரவை சபாநாயகர் விஜேந்தர் குப்தா, பஞ்சாப் டிஜிபி, குற்றப்பிரிவு டிஜிபி மற்றும் ஜலந்தர் போலீஸ் கமிஷனர் ஆகியோருக்கு நேற்று நோட்டீஸ் அனுப்பினார். அதில், “சம்பந்தப்பட்ட வீடியோ டெல்லி பேரவையின் சொத்து. இதை பஞ்சாப் போலீஸார் பயன்படுத்துவது கிரிமினல் குற்றம். வீடியோ விவகாரத்தில் அமைச்சர் கபில் மிஸ்ரா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது குறித்து 48 மணி நேரத்தில் விளக்கம் அளிக்க வேண்டும்” என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## வேலை வாய்ப்பு மோசடி; மியான்மரில் சிக்கி தவித்த 27 இந்தியர்கள் மீட்பு

**புதுடெல்லி, ஜன.12:**

வெளிநாடுகளில் வேலை வாங்கி தருகிறோம் என கூறி இந்தியர்கள் 27 பேரை மியான்மர் நாட்டு எல்லை பகுதிக்கு அழைத்து சென்றுள்ளனர். இதன்பின்னர், அவர்களை உடல்ரீதியாக துன்புறுத்தி, கொடுமைப்படுத்தி உள்ளனர். அவர்களுக்கு மிரட்டல் விடுத்து, இணையதள மோசடிகளில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளனர்.

இதுபற்றி ஸ்ரீகாகுளம் எம்.பி. மற்றும் விமான போக்குவரத்து துறை மந்திரி ராம் மோகன் நாயுடு, மத்திய வெளிவிவகார மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதி, உடனடியாக அவர்களை மீட்டு, இந்தியாவுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டு கொண்டார். இந்த சம்பவம் தூதரக அதிகாரிகள் வழியே மத்திய வெளிவிவகார அமைச்சகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதன் அதிகாரிகள், மியான்மர் நாட்டின் யாங்கோன் நகரில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளை தொடர்பு கொண்டனர். இதனை தொடர்ந்து நடந்த முயற்சியாக, 27 பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.

## பாஜகவின் சித்தாந்தம் முஸ்லிம்களுக்கு எதிரானது அல்ல; நிதின் கட்காரி பேச்சு



**நாக்பூர், ஜன.12:**

மராட்டியத்தில் உள்ள 29 மாநகராட்சிகளுக்கு வருகிற 15-ந்தேதி தேர்தல் நடைபெறுகிறது. தனது சொந்த ஊரான நாக்பூரில் நடைபெற்ற பா.ஜனதா பிரசார பொதுக்கூட்டத்தில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை மந்திரி நிதின் கட்காரி கலந்து கொண்டு பேசியதாவது:- பாஜக சித்தாந்தம் சாதி, மதம் மற்றும் மொழி பாகுபாடின்றி அனைவருக்கும் பணியாற்றுவதையே கற்றுக்கொடுக்கிறது. தான் ஒரு தீவிர பா.ஜனதா தொண்டனாக இருந்தாலும், தனக்கு வாக்களித்தவர்கள் மற்றும் வாக்களிக்காதவர்கள் என அனைவருக்கும் பொதுவான மக்கள் பிரதிநிதியாகவே பணியாற்றுகிறேன். பாஜக முஸ்லிம்களுக்கு எதிரானது அல்ல. நாங்கள் பயங்கரவாதிகளுக்கும், பாகிஸ்தானுக்கும் மட்டுமே எதிரானவர்கள். இந்த நாட்டிற்காக தியாகம் செய்யும் முஸ்லிம்கள், இந்துக்களை போலவே எங்களுக்கு அன்பானவர்கள். ஒருவர் மசூதி, குருத்வாரா அல்லது புத்த விகாருக்கு செல்லலாம். நாம் வழிபடும் இடங்கள் வேறாக இருக்கலாம், ஆனால் நம் அனைவரின் ரத்தமும் ஒன்றுதான், நாம் அனைவரும் பாரத தேசத்தவர்கள். பாஜக ஆட்சிக்கு வந்தால் வன்முறை ஏற்படும் என்று சில எதிர்க்கட்சி தலைவர்கள் தவறான தகவல்களை பரப்புகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## அயோத்தி ராமர் கோவிலில் தொழுகை செய்ய முயன்ற காஷ்மீர் நபர் கைது

**லக்னோ, ஜன.12:**

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் இந்து மத கடவுள் ராமர் கோவில் உள்ளது. இந்த கோவிலுக்கு தினமும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர்.

இந்நிலையில், அயோத்தி ராமர் கோவிலுக்கு இன்று காஷ்மீரை சேர்ந்த அகமது ஷேக் (வயது 55) என்ற இஸ்லாமியர் சென்றுள்ளார். கோவிலுக்கு சென்ற அகமது ஷேக் கோவில் வளாகத்தில் இஸ்லாமிய மத வழிபாடான தொழுகை செய்ய முயன்றுள்ளார்.

அப்போது அங்கு பாதுகாப்புப்பணியில் இருந்த ஊழியர்கள், அகமது ஷேக்கை தடுத்து நிறுத்தினர். அப்போது, அகமது ஷேக் சர்ச்சைக்குரிய வகையில் கோஷம் எழுப்பினார்.

இதையடுத்து, அவரை போலீசில் ஒப்படைந்தனர். உடனடியாக அகமது ஷேக்கை கைது செய்த போலீசார் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். அதேவேளை , அகமது ஷேக் மன நலம் பாதிக்கப்பட்டவர் என்றும் மன நல பாதிப்பிற்காக காஷ்மீரில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர். இந்த சம்பவத்தால் அயோத்தி ராமர் கோவிலில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## ஐ-பேக் அலுவலகத்தில் சோதனை: உச்சநீதிமன்றத்தில் மே.வங்க அரசு கேவியட் மனு



**புதுடெல்லி, ஜன.12:**

மேற்கு வங்கத்தில் இந்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஆளும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அரசியல் வியூக நிறுவனமாக ஐ-பேக் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் கொல்கத்தாவில் உள்ள ஐ-பேக் நிறுவனம், அதன் இயக்குநர் பிரதீக் ஜெயின் வீடு உள்ளிட்ட 10 இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை சோதனை நடத்தினர்.

நிலக்கரி ஊழல் தொடர்பான சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் இந்த சோதனை நடைபெற்றது.

சோதனை நடைபெற்ற இடங்களில் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி நுழைந்து, ஆவணங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் உள்ளிட்ட முக்கிய ஆதாரங்களை எடுத்துச் சென்றதாக அமலாக்கத் துறை குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கு எதிராக சிபிஐ விசாரணை கோரி கொல்கத்தா உயர் நீதி மன்றத்தை அமலாக்கத் துறை அணுகியது.

இந்நிலையில் ஐ-பேக் நிறுவனத்தில் அமலாக்கத் துறை சோதனை தொடர்பாக, தங்களை கேட்காமல் எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படக் கூடாது என உச்ச நீதிமன்றத்தில் மேற்கு வங்க அரசு நேற்று கேவியட் மனு தாக்கல் செய்துள்ளது.

## கோவாவில் ரவுடி ஜாமினில் விடுதலையானதை கொண்டாடிய சிறை வார்டன் சஸ்பெண்ட்

**பனாஜி, ஜன.12:**

கோவாவில் ரவுடி ஜாமினில் விடுதலையானதை அடுத்து நடந்த கொண்டாட்டத்தில் பங்கேற்ற சிறை வார்டன் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

கோவா மாநிலத்தின் தெற்கு பகுதியில் கடந்த ஆண்டு இரு ரவுடி கும்பல்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட அமோக் நாயக் பனாஜியில் உள்ள மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு உள்ளூர் நீதிமன்றம் சமீபத்தில் ஜாமீன் வழங்கியது.


இந்த சூழ்நிலையில், ஒரு வீடியோ சமூக ஊடகங்களில் வேகமாக பகிரப்பட்டது.

அதில், மத்திய சிறையிலிருந்து அமோக் நாயக் வெளியே வந்தபோது, அவர் மீது மதுவை பீய்ச்சியடித்தும் பட்டாசு வெடித்தும் சிலர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் அங்கு எடுக்கப்பட்ட குழு புகைப்படத்தில், சிறை வார்டன் லட்சுமண் பட்லோஸ்கரின் தோளில் கையைப் போட்டபடி நாயக் போஸ் கொடுத்துள்ளார்.

இந்த தகவலை அறிந்த சிறைத் துறை, வார்டன் பட்லோஸ்கரை நேற்று சஸ்பெண்ட் செய்தது. இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ள காவல் கண்காணிப்பாளர் (சிறைகள்) சுசேதா தேசாய், அவரிடம் விசாரணை நடைபெறுவதாக தெரிவித்துள்ளார்.

வடக்கு கோவாவில் அமைந்துள்ள கோல்வேல் மத்திய சிறைச்சாலைக்குள் செல்போன்கள் மற்றும் கடத்தல் பொருட்கள் கிடைப்பது குறித்து மும்பை உயர் நீதிமன்றத்தின் கோவா அமர்வு கவலை தெரிவித்த 2 நாட்களுக்குப் பிறகு, சிறை வார்டன் ஒருவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெல்லி உள்பட வடமாநிலங்களில் கடும் குளிர்: மக்கள் அவதி




**புதுடெல்லி, ஜன.12:**

டெல்லியில் கடும் குளிர் மக்களை வாட்டி வதைத்து வருகிறது. நேற்று காலை குறைந்தபட்ச வெப்பநிலை 4.2 டிகிரி செல்சியஸாக குறைந்தது. டெல்லியில் நடப்பு குளிர்காலத்தில் பதிவான மிகக் குறைந்த வெப்பநிலை இதுவாகும். டெல்லியிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் மூடுபனியுடன் கூடிய குளிர் அலை வீசுகிறது. இதனால், மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர்.

உத்தரபிரதேசம், பஞ்சாப், ஹரியானா உட்பட வட மாநிலங்கள் முழுவதும் அடுத்த 3 நாட்களுக்கு கடுமையான குளிர் அலை வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த மாநிலங்களிலும் டெல்லியைப் போன்று, மிகக் குளிரான காலைப் பொழுது 4.2 டிகிரி செல்சியஸில் பதிவாகி உள்ளது. மலைப்பிரதேசங்களான இமாச்சல பிரதேசம் மற்றும் உத்தராகண்டிலும் கடுமையான குளிர் நிலவுகிறது. சில இடங்களில் உறைபனியும் காணப்படுகிறது. உறைபனியுடன் கூடிய கடும் குளிர் காரணமாக வட மாநிலங்களின் விமானங்கள் மற்றும் ரயில் சேவைகளில் தொடர்ந்து தாமதம் ஏற்பட்டு வருகிறது. வாகன ஓட்டிகள் அதிகாலை வேளைகளில் வாகனங்களில் செல்ல கடும் சிரமத்தை எதிர்கொண்டு வருகிறார்கள்.

## டெல்லியில் உலக புத்தக காட்சி தொடக்கம்: 35 நாடுகளைச் சேர்ந்த 1000 வெளியீட்டாளர் பங்கேற்பு



**புதுடெல்லி, ஜன.12:**

தலைநகர் டெல்லியில் தொடங்கியுள்ள உலக புத்தக காட்சியில் 35-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1000-க்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

உலக புத்தகக் காட்சியில் டெல்லியில் நேற்று தொடங்கியது. 9 நாட்கள் நடைபெறும் இந்தக் புத்தகக் காட்சியை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்.

இதில் ஸ்பெயின் கலாச்சாரத்துறை அமைச்சர் எர்னஸ்ட் உர்தாசன் டோம்நெக், இந்தியாவுக்கான கத்தார் தூதர் முகமது ஹாச் அல்-ஜபிர், கத்தார் கலாச்சாரத்துறை அமைச்சர் ஷேக் அப்துல் ரகுமான் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்திய ராணுவத்தின் வரலாறு என்ற கருப்பொருளில் இந்த புத்தகக் காட்சி டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறுகிறது. இதில் அனுமதி இலவசம்.

இந்த புத்தகக் காட்சியில் 35-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 1000-க்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்கள் பங்கேற்றுள்ளனர். இந்திய ராணுவத்தின் வீரம் மற்றும் ஞானத்தை போற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் 500-க்கும் மேற்பட்ட புத்தகங்கள், போஸ்டர்களை டேராடூனில் உள்ள இந்திய ராணுவ அகாடமி காட்சிக்கு வைத்துள்ளது.

இந்த அரங்கில் அர்ஜுன் டேங்க், ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க் கப்பல், தேஜஸ் போர் விமானம் ஆகியவற்றின் மாதிரிகள் வைக்கப்பட்டுள்ளன. பரம் வீர் சக்ரா விருது பெற்றவர்களுக்கு இங்கு புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

1947-ம் ஆண்டு முதல் ஆபரேஷன் சிந்தூர் வரை நாடு மேற்கொண்ட முக்கிய போர்கள் பற்றிய விளக்கங்கள் இங்கு அளிக்கப்படுகின்றன. வந்தே மாதரம் பாடலின் 150-ம் ஆண்டு விழா, சர்தார் வல்லபபாய் படேலின் வாழ்க்கை ஆகியவையும் இந்த புத்தக காட்சியில் இடம் பெற்றுள்ளன.

இங்கு 3000-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 600 இலக்கிய நிகழ்ச்சிகளும் இங்கு நடைபெறுகின்றன. இதில் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பிரபலங்கள் பலரும் பங்கேற்கின்றனர்.

## ஆக்ராவில் சட்டவிரோதமாக வசித்த வங்கதேசத்தை சேர்ந்த 38 பேர் நாடு கடத்தல்

**ஆக்ரா, ஜன.12:**



உத்தரபிரதேச மாநிலம் ஆக்ரா உதவி காவல் ஆணையர் (புலனாய்வு) தினேஷ் சிங் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த 2022-ம் ஆண்டு பிப். 5-ம் தேதி, ஆக்ராவின் சிக்கந்திரா காவல் நிலையப் பகுதிக்குட்பட்ட செக்டார் 15-ல் சட்டவிரோதமாக வங்கதேசத்தை சேர்ந்த 38 பேர் சட்டவிரோதமாக வசிப்பது கண்டறியப்பட்டது. இவர்களில் 23 பேர் ஆண்கள், 7 பேர் பெண்கள், 8 பேர் சிறார்கள் ஆவர். அவர்கள் யாரிடமும் செல்லுபடியாகும் ஆவணம் எதுவும் இல்லை.

இந்தியாவில் சட்டவிரோதமாக வசித்த குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் நீதிமன்றம் 3 ஆண்டு தண்டனை விதித்தது.

இதையடுத்து 7 பெண்கள் உள்ளிட்ட 30 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். 8 சிறார்களும் குழந்தைகள் இல்லம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தனர்.

தற்போது அனைவரும் தண்டனை காலத்தை நிறைவு செய்துவிட்டனர். எனவே இவர்கள் 38 பேரும் வாகனங்கள் மூலம் வங்கதேச எல்லைக்கு சனிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் ஜனவரி 13-ம் தேதி எல்லை பாதுகாப்பு படையிடம் ஒப்படைக்கப்படுவார்கள். இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

## சபரிமலை வழக்கில் கைதான தந்திரி மருத்துவமனையில் அனுமதி

**திருவனந்தபுரம், ஜன.12:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் துவார பாலகர் சிலைகள், கருவறை கதவுகளில் பூசப்பட்டிருந்த 4.5 கிலோ தங்கம் திருடப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக ஐயப்பன் கோயில் முன்னாள் அர்ச்சகர் உன்னிகிருஷ்ணன் போத்தி, தேவசம் போர்டு முன்னாள் தலைவர் பத்மகுமார் உட்பட 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக ஐயப்பன் கோயில் தந்திரி கண்டரரு ராஜீவரு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு நேற்று காலை நெஞ்சு வலி ஏற்பட்டதால் திருவனந்தபுரம் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

## மக்களுக்கு சேவை செய்தால் மட்டுமே உயர்ந்த பதவிக்கு வர முடியும்: இஷா சிங் அறிவுரை

**புதுச்சேரி, ஜன.12:**



புதுச்சேரி உப்பளம் ஹெலிபேடு மைதானத்தில் நடந்த விஜய் கலந்துகொண்ட த.வெ.க. பொதுக்கூட்டத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த ஐ.பி.எஸ். அதிகாரியான சீனியர் போலீஸ் சூப்பிரண்டு இஷா சிங், தனி ஆளாக நின்று கூட்டத்தை கட்டுப்படுத்தினார். இது சமூக வலைதளத்தில் வைரலாக பரவியது.

இந்தநிலையில் இஷா சிங் கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்லிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இதற்கு பலரும் சமூக வலைதளத்தில் அவரது புகைப்படத்தை பதிவிட்டு பிரியாவிடை கொடுத்தனர். இருப்பினும் இன்னும் அவர் டெல்லிக்கு பணிமாறுதலாக செல்லவில்லை. இதற்கிடையே கம்பன் கலையரங்கத்தில் நடந்த போலீசாருக்கு பதவி உயர்வு வழங்கும் விழாவில் போலீஸ் உயர் அதிகாரிகள் மற்றும் சீனியர் போலீஸ் சூப்பிரண்டு இஷா சிங் பங்கேற்றனர். அப்போது அவரிடம், பதவி உயர்வு பெற்ற போலீசார் வாழ்த்து பெற்றனர். அவர்களிடம், மக்களுக்கு சேவை செய்வதன் மூலம் மட்டுமே உயர்ந்த பதவிக்கு வரமுடியும் என்று அறிவுரை கூறினார். இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாக பரவி வருகிறது.

## அயோத்தியில் 15 கி.மீ. சுற்றளவில் அசைவ உணவுக்கு தடை!

**புதுடெல்லி, ஜன.12:**

புதுடெல்லி: அயோத்தியின் 15 கி.மீ. சுற்றளவில் அசைவ உணவு விநியோகிக்க தடை செய்யப்பட்டுள்ளது.ஆன்லைனில் மது உள்ளிட்டவை வழங்கும் புகாரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம் மாநிலம் அயோத்தியில் ராமர் கோயில் புதிதாகக் கட்டப்பட்டது. இக்கோயிலை சுற்றியுள்ள சுமார் 15 கி.மீ. பகுதி ‘பஞ்ச்கோசி பரிக்ரமா’ என அழைக்கப்படுகிறது. அயோத்தி மற்றும் ஃபைசாபாத்தை இணைக்கும் 14 கிலோ மீட்டர் நீளத்தில் ராமர் புனிதப் பாதை அமைந்துள்ளது. இப்பகுதியில் மதுபானம் மற்றும் இறைச்சி விற்பனைக்குத் தடை விதித்து அயோத்தி மாநகராட்சி மே 2025-ல் அறிவித்திருந்தது. எனினும், அங்குள்ளவர்கள் ஆன்லைன் உணவு விநியோகத் தளங்களில் அசைவப் பொருட்களை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இதன் மீது அயோத்தி மாவட்ட நிர்வாகத்துக்கு மீண்டும் மீண்டும் புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. புனித நகரமான அயோத்தியின் சில ஹோட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் விருந்தினர்களுக்கு அசைவ உணவு மற்றும் மதுபானங்களை வழங்கி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மாநகராட்சி அறிவிப்பிற்கு பின்பும், கடந்த ஒன்பது மாதங்களாக மதுபான விற்பனைக்கான தடை பெரிய அளவில் அமல்படுத்தப்படவில்லை எனப் புகார்கள் உள்ளன. இது குறித்து அயோத்தி மாநகராட்சியின் உதவி உணவு ஆணையர் மாணிக் சந்திர சிங் கூறுகையில், “தடை இருந்தபோதிலும், ஆன்லைன் தளங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு அசைவ உணவுப் பொருட்கள் தொடர்ந்து விநியோகிக்கப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளன.

புகார்களைத் தொடர்ந்து, ஆன்லைன் அசைவ உணவு விநியோகத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அனைத்து ஹோட்டல்கள், கடைக்காரர்கள் மற்றும் விநியோக நிறுவனங்களுக்கு இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## காட்டுப்பன்றி வேட்டைக்குச் சென்று திரும்பிய போது டூவீலரில் வெடிமருந்து வெடித்து பெண் பலி

**புதுச்சேரி, ஜன.12:** காட்டுப்பன்றி வேட்டைக்கு சென்று திரும்பிய போது டூவீலரில் வெடிமருந்து வெடித்து பெண் பலியானார். அவரின் மருமகன் காயம் அடைந்தார்.

வில்லியனூரைச் சேர்ந்த நரிக்குறவ பெண் ஜெரினா (வயது 52). இவர் தனது மருமகன் பாண்டியனுடன் (வயது 45). தமிழக பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் நேற்று இரவு காட்டுப் பன்றியை வேட்டையாட சென்றார். அப்போது பன்றி தாக்க வந்தால் அதன் மீது வீசுவதற்கு வெடி மருந்தை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

பன்றியை வேட்டையாடி விட்டு மீதமிருந்த வெடி மருந்துடன் மோட்டார் சைக்கிளில் திரும்பினர். வில்லியனூர் கூடப்பாக்கம் சாலையில் இன்று காலை வந்து கொண்டிருந்தனர்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த வெடிமருந்து திடீரென வெடித்தது. இதில் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருந்த ஜெரினா தூக்கி வீசப்பட்டார். இதில் தூக்கி வீசப்பட்ட ஜெரினா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பாண்டியன் காலில் தீப்பற்றி எரிந்தது. இதில் பாண்டியன் மயங்கி சாலையில் விழுந்து கிடந்தார்.

காயமடைந்த பாண்டியனை அந்த வழியாக வந்தவர்கள் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து வில்லியனூர் போலீஸார் சம்பவ இடத்திற்குச் சென்று ஆய்வு செய்தனர். தொடர்ந்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். மேலும், அங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவியில் காட்சியையும் ஆய்வு செய்தனர்.

## ரூ.80 லட்சம் மோசடி செய்த இருவர் மைசூரில் கைது - சென்னை சைபர் கிரைம் போலீஸார் நடவடிக்கை

**சென்னை, ஜன.12:** தனியார் சிமென்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பெயரில் போலி குறுஞ் செய்தி அனுப்பி, ரூ.80 லட்சம் பணத்தை அபகரித்த வழக்கில், கர்நாடகாவைச் சேர்ந்த 2 இளைஞர்களை, சென்னை மத்திய குற்றப் பிரிவு சைபர் கிரைம் போலீஸார் கைது செய்தனர்.

சென்னை, நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்தவர் பிரணா தார்த்தி ஹரன் (59). தனியார் சிமென்ட் நிறுவனத்தில் மூத்த மேலாளராகப் பணி யாற்றி வருகிறார். கடந்த அக்டோபர் மாதம். இவரது வாட்ஸ்-அப் எண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது.

அதில் பேசிய நபர், தன்னை அந்த நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி கிருஷ்ணமூர்த்தி சுரேஷ் என அறிமுகப்படுத்தி கொண்டு, அவசரத் தேவைக்காக குறிப்பிட்ட நிறுவனத்தின் பெயரில் உள்ள வங்கி கணக்குக்கு ரூ.80 லட்சம் மாற்றுமாறு கூறியுள்ளார்.

தனது நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரிதான் கேட்கிறார் என்று நம்பிய மேலாளர், எவ்வித சரி பார்ப்பும் செய்யாமல் அந் தப் பணத்தை அனுப்பியுள் ளார். பின்னர், நேரில் விசா ரித்த போது தான், அது 'மேன் -இன்-தி-மிடில்' என்ற சைபர் மோசடி என்பது தெரியவந்தது. இதுகுறித்து, அவர் சைபர் கிரைம் போலீஸில் புகார் அளித்தார்.

வழக்குப் பதிவு செய்த சைபர் கிரைம் போலீஸார், தீவிர விசாரணை மேற்கொண்டனர். மோசடிப் பணம் எங்கே சென்றது என ஆய்வு செய்ததில், கர்நாடக மாநிலம் மைசூரைச் சேர்ந்த முகமது அர்பாஸ் (21) என்பவரது வங்கி கணக்குக்கு ரூ.5.48 லட்சமும், அதே ஊரைச் சேர்ந்த ஹஷீர் அக்தர் (21) என்பவரது கணக்குக்கு ரூ.10 லட்சமும் சென்றது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, தனிப்படை போலீஸார் மைசூர் விரைந்து சென்று, தலைமறைவாக இருந்த இருவரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட் டன. கைதான இருவரும் கமிஷன் பணத்துக்காகத் தங்களது வங்கி கணக்குகளை மோசடி கும்பலுக்குப் பயன்படுத்த அனுமதித்தது தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்று சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்: திமுக பிரமுகர் உட்பட 15 பேர் மீது வழக்கு

**திருச்சி, ஜன.12:** கரூரைச் சேர்ந்த 15 வயது சிறுமி, தாய், தாத்தாவுடன் 2021-ல் திருச்சி புத்தூர் பகுதியில் தங்கியுள்ளார். அப்போது, அவருக்கு பலர் பாலியல் துன்புறுத்தல் அளித்துள்ளனர். அந்த சிறுமியின் தாய், தாத்தா, தாத்தாவின் தம்பியான திமுக பிரமுகர் உள்ளிட்டோர் இதற்கு உடந்தையாக இருந்துள்ளனர்.

இந்நிலையில், கர்ப்பமடைந்த அந்த சிறுமிக்கு 2023 ஜூன் 14-ம் தேதி தனியார் மருத்துவமனையில் பெண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தையை மருத்துவமனையில் விட்டுவிட்டு, சிறுமியுடன் அக்குடும்பத்தினர் தலைமறைவாகிவிட்டனர்.

இந்நிலையில், கடந்த டிச.23-ம் தேதி திருச்சி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நலக்குழுவில் விசாரணைக்கு ஆஜராகும்படி, சிறுமியின் குடும்பத்தினருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. கடந்த 3-ம் தேதி அந்த சிறுமி, தனது தாயார், தாத்தாவுடன் ஆஜரானார். விசாரணையில், தனக்கு யாரெல்லாம் பாலியல் தொல்லை கொடுத்தனர் என்று சிறுமி விளக்கியுள்ளார்.

இது தொடர்பாக ஸ்ரீரங்கம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில், திருச்சி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி ராகுல் காந்தி புகார் கொடுத்தார். அதன்பேரில், சிறுமியின் தாய், தாத்தா, இவரது தம்பியான திமுக பிரமுகர் உட்பட 15 பேர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

மேலும், சிறுமியின் தாய், தாத்தா, இவரது தம்பியைப் பிடித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். அத்துடன், சிறுமியின் குழந்தைக்கு யார் காரணம் என்பதைக் கண்டறிய டிஎன்ஏ பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 159 கிலோ குட்கா புகையிலை பறிமுதல்: டீ கடைக்காரர் கைது

**தூத்துக்குடி, ஜன.12:** தூத்துக்குடி சிப்காட் காவல் நிலைய சப்-இன்ஸ்பெக்டர் சுப்புராஜ் மற்றும் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பானை ரோடு எப்.சி.ஐ. குடோன் அருகில் ஒரு டீ கடையில் சோதனையிட்டபோது அங்கு தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் இருப்பது தெரியவந்தது.

இது தொடர்பாக அந்த டீ கடையை நடத்தி வரும், தூத்துக்குடி 3வது மைல், புதுக்குடியைச் சேர்ந்த செல்லசாமி மகன் செல்லப்பாண்டி (வயது 35) என்பவரை போலீசார் கைது செய்தனர்.

மேலும் அங்கிருந்த 159 கிலோ குட்கா புகையிலை பொருட்கள், அதனை கொண்டு வந்த ஒரு கார் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## அரசு பள்ளிகளில் தலைமை ஆசிரியர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாதது ஏன்? - பள்ளிக்கல்வித்துறை விளக்கம்

**சென்னை, ஜன.12:** அரசு பள்ளிகளில் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன. இதற்கு பள்ளிக்கல்வித்துறை விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-




அரசு பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்களில் 1,036 பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றை நீதிமன்ற வழக்குகளின் காரணமாக நிரப்ப இயலாத நிலை உள்ளது. அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கு ஊட்டுப் பதவியாக பட்டதாரி ஆசிரியர் பதவி மட்டும் உள்ளது.

இதனால் இந்த பதவி உயர்வுக்கான முன்னுரிமைப் பட்டியலில் பட்டதாரி ஆசிரியர் பணியில் இருந்து முதுநிலை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற்றவர்களை சேர்க்கக்கூடாது என்று சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. மறுபுறம் 2016-ம் ஆண்டுக்கு பின்னர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசியராக பதவி உயர்வில் சென்ற 1,187 முதுநிலை ஆசிரியர்களை மீண்டும் தரம் இறக்காமல் பணியில் தொடரக்கோரி சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணை பிப்ரவரி 4-ந்தேதி வரவுள்ளது. மேலும், ஆசிரியர் பணிக்கும், பதவி உயர்வுக்கும் ஆசிரியர் தகுதித்தேர்வு (டெட்) கட்டாயம் என்று சுப்ரீம்கோர்ட்டு கடந்த செப்டம்பரில் தீர்ப்பு வழங்கியது. இதுதொடர்பாக தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்த சீராய்வு மனு நிலுவையில் உள்ளது.

தமிழகத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரெயில் சேவை பிப்ரவரி 2-வது வாரத்தில் தொடங்க திட்டம்

**சென்னை, ஜன.12:** சென்னையின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படும், போரூர் - வடபழனி வரையிலான 7 கி.மீ., வழித்தடத்தில் இன்று சோதனை ஓட்டம் நடைபெறுகிறது. பூந்தமல்லி- போரூர் வரையிலான 10 கி.மீ தூரத்திற்கு சோதனை ஓட்டம் நிறைவடைந்த நிலையில் போரூர்- வடபழனி இடையே இன்று சோதனை ஓட்டம் நடைபெற்றது.



7 கி.மீ வேகத்தில் ரெயிலை இயக்கி சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனை வெற்றிகரமாக நிறைவு பெற்றதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்தது. இது சென்னையின் முதல் இரட்டை அடுக்கு மெட்ரோ மேம்பால வழித்தடமாகும். இதில் கீழ் அடுக்கில் வாகனங்களும், மேல் அடுக்கில் மெட்ரோ ரெயில்களும் செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பூந்தமல்லி - வடபழனி இடையே மெட்ரோ ரெயில் சேவையை பிப்ரவரி 2-வது வாரத்தில் தொடங்க சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. இதனால் 25 நிமிடங்களில் பூந்தமல்லி பைபாஸில் இருந்து வடபழனி சென்றடையலாம். 7 நிமிடத்தில் ஒரு ரெயில் என்ற வீதத்தில் சேவை இருக்கும் என மெட்ரோ ரெயில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இது ஜூன் மாதத்தில் கோடம்பாக்கம் வரை நீட்டிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோவை, மதுரை மெட்ரோ திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கு விளக்கம் அளிக்கக்கூடிய வகையிலான அறிக்கை முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது; அந்தத் திட்ட அறிக்கையை மத்திய அரசுக்கு தமிழ்நாடு அரசு அனுப்பும். நிலம் கையகப்படுத்த ஆய்வு செய்யக்கூடிய பணிகள் நிறுத்தப்படவில்லை; மதுரைக்கு ஏற்கனவே முடிந்து விட்டது இன்னும் ஒரு வாரத்தில் கோவைக்கும் முடிந்து விடும் என்று சென்னை மெட்ரோ ரெயில் மேலாண் இயக்குநர் சித்திக் கூறினார்.

## கரூரை விட டெல்லியில் விஜய்க்கு உரிய பாதுகாப்பு கிடைக்கும்- வானதி சீனிவாசன்

**கோவை, ஜன.12:** கோவையில் இன்று நடந்த நம்ம ஊரு மோடி பொங்கல் விழாவில் பங்கேற்ற வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ. நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.





அவர் கூறியதாவது:-

நம்முடைய பண்டிகைகள் பாரத நாட்டின் கலாசாரத்துடன் பின்னிப் பிணைந்த நிகழ்வு ஆகும். முதன்முறையாக நம்ம ஊரு மோடி பொங்கல் நிகழ்ச்சியில் பா.ஜ.க. தேசிய செயல் தலைவர் நிதின் நபின் உற்சாகத்தோடு கலந்து கொண்டார்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு எந்த விதமான இந்துக்களின் பண்டிகைகளுக்கும் முதலமைச்சர் ஸ்டாலின் வாழ்த்துக்களை தெரிவிப்பதில்லை.

பொங்கல் பண்டிகையின்போது மட்டும் சமத்துவ பொங்கல் என்ற ஒன்றை கொண்டாடுகிறார். அனைத்து பானைகளிலும் பஞ்சை வைத்து சிறுபான்மையினருடன் சேர்ந்து சமத்துவ பொங்கல் என்று இல்லாத ஒன்றை முதலமைச்சர் கொண்டாடி வருகிறார்.

சிறுபான்மையின மக்கள் அவர்களது மதப் பண்டிகையை கொண்டாடுவார்கள். அதை நாங்கள் மதிக்கிறோம். வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் தமிழகத்திலேயே இல்லாத ஒன்றாக பொங்கல் பண்டிகையை கொண்டாடா தவர்களுடன் சேர்ந்து இந்து மக்களை ஏமாற்றுவதற்காக சமத்துவ பொங்கல் விழாவை முதமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்.

பிரதமர் மோடி விரைவில் தமிழகம் வர உள்ளார். அதன்பின்னர் தேர்தல் பணிகள் வேகமெடுக்கும். கொங்கு மண்டலத்திற்கு தேசிய செயல் தலைவர் வருகை புரிந்து இருப்பது கூடுதல் உற்சாகத்தையும் பலத்தையும் கொடுத்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

த.வெ.க. தலைவர் விஜய், டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜர் ஆவதற்காக கூடுதல் பாதுகாப்பு கேட்கப்பட்டுள்ளதே என்ற கேள்விக்கு வழக்கமாக பாதுகாப்பு கேட்பது என்பது ஒரு நடைமுறை. ஆனால் நிச்சயமாக கரூரை விட நல்ல பாதுகாப்பு டெல்லியில் வழங்கப்படும் என வானதி சீனிவாசன் பதில் அளித்தார்.

## கச்சத்தீவு திருவிழா: வரும் 15ம் தேதி முதல் விண்ணப்பம்

**ராமேசுவரம், ஜன.12:** இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடைப்பட்ட நடுக்கடல் பகுதியில் கச்சத்தீவு உள்ளது. ராமேசுவரம் பகுதியில் இருந்து 12 கடல் மைல் தொலைவிலும், இலங்கை நெடுந்தீவு பகுதியில் இருந்து 18 கடல் மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த கச்சத்தீவில் புனித அந்தோணியார் ஆலயம் உள்ளது. இதனிடையே இந்த ஆலய திருவிழா பிப்ரவரி 27, 28ம் தேதிகளில் நடைபெறுகிறது.




இந்நிலையில் கச்சத்தீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து கலந்து கொள்பவர்களுக்கு ஜன.15ம் தேதி முதல் 25ம் தேதி வரை விண்ணப்பம் விநியோகம் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் 5 - 70 வயதுக்குள் இருப்பவர்கள் மட்டுமே திருவிழாவில் கலந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கச்சத்தீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்தும், இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்ள உள்ளனர். அதற்கான ஏற்பாடுகளை இலங்கை அரசு செய்து வருகிறது.

## திருச்செந்தூர் கோவில் உண்டியலில் ரூ.3.39 கோடி வருவாய்; 724 கிராம் தங்கம் கிடைத்தது



**தூத்துக்குடி, ஜன.12:** திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் உண்டியல் எண்ணும் பணி கோயில் நிர்வாக அலுவலக அரங்கில் தக்கார் அருள்முருகன் தலைமையில் நடைபெற்றது. இணை ஆணையர் ராமு முன்னிலை வகித்தார். இந்து சமய அறநிலையத்துறை முதுநிலை கணக்கு அலுவலர் ராஜாராமன், உதவி ஆணையர்கள் செந்தில்குமார், நாகவேல், கண்காணிப்பாளர் ரோகிணி, ஆய்வர் செந்தில்நாயகி, மக்கள் பிரதிநிதிகள் வேலாண்டி, மோகன், சுப்பிரமணியன், கருப்பன் உள்ளிட்டோர் இந்த பணியில் கலந்துகொண்டனர்.

உண்டியல் எண்ணிக்கையில் 3 கோடியே 39 லட்சத்து 56 ஆயிரத்து 353 ரூபாயும் (ரூ.3,39,56,353), தங்கம் 724 கிராம், வெள்ளி 26 கிலோ 340 கிராம், பித்தளை 123 கிலோ 760 கிராம், செம்பு 12.48 கிலோ மற்றும் வெளிநாட்டு பணம் 1408-ம், வெள்ளி காசு மாலை, சுமார் ஒரு அடி உயரம் கொண்ட தங்க வேல் ஆகியவற்றை பக்தர்கள் காணிக்கையாகசெலுத்தியிருந்தது தெரியவந்தது. உண்டியல் எண்ணும் பணியில் அயற்பணி, கோயில் பணியாளர்கள் ஈடுபட்டனர்.

## மெரினா கடற்கரையில் குப்பை கொட்டினால் ரூ.5000 அபராதம்

### சென்னை மாநகராட்சி எச்சரிக்கை



**சென்னை, ஜன.12:** மெரினா உள்ளிட்ட பிற கடற்கரைகளில் குப்பைகளை கண்ட இடங்களில் கொட்டினால் ரூ.5000 அபராதம் விதிக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக சென்னி மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்தியில், "சென்னையின் பெருமையாகவும், சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் வருகை தரும் முக்கிய சுற்றுலாதலமாகவும் விளங்கும் மெரினா கடற்கரை, சென்னை மாநகரின் அடையாளமாகத் திகழ்கிறது. மெரினா கடற்கரையை சர்வதேசதரத்தில் மேம்படுத்தி பாதுகாத்திட பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மெரினா கடற்கரையை தூய்மையாகவும்சுகாதாரமாகவும் பராமரிப்பது அனைவரின் பொது பொறுப்பாகும். திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016 (Solid Waste Management Rules, 2016) ன்படி, பொது இடங்கள் மற்றும் கடற்கரைகளில் குப்பைகள், பிளாஸ்டிக்கழிவுகள், உணவுப் பொருள் எச்சங்கள் உள்ளிட்ட எந்தவிதமான கழிவுகளையும் கொட்டுவது சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பாக, மெரினா கடற்கரையின் தூய்மையை உறுதி செய்வதற்காக Chennai Enviro Solutions Pvt. Ltd (SPV) என்ற தனியார் நிறுவனம் மூலம் கடற்கரை மணற்பரப்பை சுத்தம் செய்யும் 7 இயந்திரங்கள் (Beach Cleaning Machines) மற்றும் நாள்தோறும் சுழற்சி முறைகளில் மொத்தம் 274 தூய்மைப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு தொடர்ந்து தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இப்பகுதிகளிலிருந்து மட்டும் நாள்தோறும் சராசரியாக 4 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டு வருகின்றது.

மேலும், பெசன்ட் நகர், திருவான்மியூர், பாலவாக்கம், நீலாங்கரை, அக்கரை, திருவொற்றியூர் கடற்கரை பகுதியில் நாள்தோறும் சுழற்சி முறைகளில் மொத்தம் 53 தூய்மைப் பணியாளர்கள் தூய்மைப் பணிக்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்தனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், பொதுமக்களின் போதியஒத்துழைப்பு இல்லாத காரணத்தினால், கடற்கரையில் பல இடங்களில் குப்பைகள் மற்றும் உணவுக்கழிவுகள் காணப்படுவதால் அழகற்றதாகவும், சுகாதார குறைபாடுகளை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. குறிப்பாக, கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் கழிவுகளை போடாமல், திறந்த வெளிகளில் வீசப்படுகிறது.

இதன் காரணமாக சென்னையில் அமைந்துள்ள மெரினா மற்றும் இதர முக்கிய கடற்கரையின் அழகும், சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுவதோடு, உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே சென்னை நகரின் நற்பெயருக்கும் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது.

எதிர்வரும் பொங்கல் பண்டிகையையொட்டி சென்னையில் அமைந்துள்ள மெரினா மற்றும் இதர முக்கிய கடற்கரைகளுக்கு பெருமளவில் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் போது, அனைவரும்பொறுப்புனர்வோடு குப்பை கழிவுகளை அதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத்தொட்டிகளில் மட்டும் போட்டு, மாநகராட்சியின் தூய்மை பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இதனை மீறி சென்னையில் அமைந்துள்ள மெரினா மற்றும் இதர முக்கிய கடற்கரையில் குப்பை கொட்டுபவர்கள் மீது உரிய சட்ட விதிகளின் படி ரூ.5,000/ அபராதம் விதித்து நடவடிக்கைமேற்கொள்ளப்படும் என்பதும் இதன்மூலம் கடுமையாக எச்சரிக்கப்படுகிறது. தூய்மையான கடற்கரை சுகாதாரமான சென்னை அனைவரின் பொறுப்பு" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஸ் விபத்தில் சிக்கி பலர் படுகாயம்

**அவினாசி, ஜன.12:** திருப்பூர், பல்லகவுண்டம்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் ஈரோடு நோக்கி சென்ற 3 பஸ்கள் அடுத்தடுத்து மோதி விபத்து ஏற்பட்டது.

முன்னால் சென்ற வாகனம் திடீரென பிரேக் போட்டதால் விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் விபத்துள்ளான பஸ், சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்ததில் அதில் பயணம் செய்த 20 பேர் படுகாயம் அடைந்தனர்.

இதனால் அந்த பகுதியில் சில மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# சென்னையில் இன்று மின் தடை ஏற்படும் இடங்கள்

**சென்னை, ஜன.12:** சென்னையில் 12.01.2026 அன்று காலை 09:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை மின் வாரிய பராமரிப்பு பணி காரணமாக கீழ்காணும் இடங்களில் மின் விநியோகம் நிறுத்தப்படும். மதியம் 2:00 மணிக்குள் பராமரிப்பு பணி முடிவடைந்தவுடன் மின் விநியோகம் கொடுக்கப்படும்.

அம்பத்தூர்: ரெட்ஹில்ஸ், கிழ்கொண்டையூர், அரக்கம்பாக்கம், கர்லபாக்கம், தாமரைபாக்கம், கதவூர், வேளச்சேரி, பாண்டேஸ்வரம், கரனை, புதுகுப்பம், வாணியன்சத்திரம், ஆயிலச்சேரி, குருவாயில், பூச்சியத்துபேடு, கோடுவல்லி, பால்பண்ணை, வேல் டெக் சாலை, கொள்ளுமேடு சாலை, புதுநகர், பாலாஜி கார்டன், ஆரன் உல்லாச சிட்டி, சோத்துப்பாக்கம் சாலை, நியூ ஸ்டார் சிட்டி, கள்ளிகுப்பம், அழிஞ்சிவாக்கம், வடகரை, மகாராஜா நகர், எம்.ஹெச். சாலை, விஷ்ணு நகர், திரு.வி.க நகர், டி.என். கே நகர், அன்பு நகர், விளாங்காடு பாக்கம், மல்லிமா நகர், டி.எச். நெடுஞ்சாலை, ஆலமரம், காந்தி நகர், ஆசிதம்பி தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள்.

# சென்னையில் தொடர் போராட்டம்: இடைநிலை ஆசிரியர்கள் 1,500 பேர் கைது



**சென்னை, ஜன.12:** சம வேலைக்கு சம ஊதியம் கோரி சென்னையில் தொடர்ந்து 16-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்ட 1,500-க்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்களை போலீஸார் கைது செய்தனர்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ் டிஏ) சார்பில், கடந்த டிச.26-ம் தேதி முதல் தொடர் போராட் டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து 16-வது நாளாக சென்னை எழும்பூர் காந்தி இர்வின் பாலத்தில் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தனர். அங்கு வருவதற்காக எழும்பூர், பூங்கா நகர், திருவல்லிக்கேணி, சிந்தாதிரிப்பேட்டை என பல்வேறு இடங்களில் ஆசிரியர்கள் திரண்டிருந்தனர்.

இதையடுத்து, ஒவ்வொரு பகுதிகளிலும் கூடியிருந்த ஆசிரியர்களை போலீஸார் தேடித்தேடிச் சென்று கைது செய்தனர். மேலும், போராட்ட இடத்துக்குப் புறப்பட தயாராக இருந்த எஸ்எஸ்டிஏ சங்க நிர்வாகிகளும் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து, அவர்களை விடுவிக்கக் கோரியும், போலீஸாரைக் கண்டித்தும் ஆசிரியர்கள் முழக்கமிட்டனர்.

பகுதிநேர ஆசிரியர்கள்: இதேபோல், திமுக தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தங்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி பகுதி நேர ஆசிரியர்களும், தற்காலிக ஆசிரியர்களை பணியிலிருந்து வெளியேற்றி தங்களுக்கு அரசுப் பணி வழங்க வேண்டுமென டெட் தேர்வில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளும் எழிலகம், டிபிஐ வளாகம் உள்ளிட்ட இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



**சென்னை, ஜன.12:** ஞாயிற்றுக்கிழமை அன்று செங்கல்பட்டு மாவட்டம், சூரை கிராமத்தில் RSS அமைப்பின் ஸ்ரீ குருகுலம் ஏற்பாடு செய்திருந்த தைப்பொங்கல் திருநாள் விழாவில் சிறப்பு விருந்தினராக சுவாமி ஸ்ரீராம் சித்ரகுப்த ஜி மஹராஜ் அவர்கள் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி விழாவினை சிறப்பித்து ஆசி உரை வழங்கினார்கள். உடன் மாநில துணைத் தலைவர் ஜவகர் ரெட்டியார் ஜி மாநிலச் செயலாளர் ரகு ஜி செங்கல்பட்டு மாவட்ட தலைவர் ராமலிங்கம் ஜி மாவட்ட பொது செயலாளர் ஆறுமுகம் ஜி மாவட்ட செயலாளர்

ஜோதி ஜி மாவட்ட இணைச் செயலாளர் துரைசாமி ஜி மாவட்ட அமைப்பாளர் வெங்கடேசன் ஜி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# போகி பண்டிகை: பிளாஸ்டிக், டயர்களை எரிக்க வேண்டாம்

## விமான நிலைய ஆணையம் வேண்டுகோள்



**சென்னை, ஜன.12:** பொங்கல் பண்டிகை வருகிற 15-ந்தேதி கொண்டாடப்படுகிறது. இதற்கு ஒரு நாள் முன்னதாக வரும் போகிப் பண்டிகையின்போது பெரும்பாலானோர் வீடுகளில் உள்ள பழைய பொருட்களை தெருக்களில் போட்டு எரிப்பது வழக்கமாக உள்ளது.

இதைப்போல் சென்னை விமான நிலையத்தை சுற்றியுள்ள மீனம்பாக்கம், கவுல் பஜார், பொழிச்சலூர், பம்மல் அனகாபுத்தூர், தரைப்பாக்கம், மணப்பாக்கம், நந்தம்பாக்கம் உள்ளிட்ட குடியிருப்பு பகுதிகளில், போகிப் பண்டிகையையொட்டி பழைய பிளாஸ்டிக் கழிவுகள், டயர்கள் உள்ளிட்ட பழைய பொருட்களை தெருக்களில் போட்டு, அதிகாலையில் எரிப்பதால், கடுமையான புகைமூட்டங்கள் ஏற்பட்டு, சென்னை விமான நிலைய ஓடுபாதை பகுதியை சூழ்ந்து கொள்ளும் நிலை ஏற்பட்டு உள்ளது.

மேலும் பனிமூட்டமும் அதிகாலை நேரத்தில் இருப்பதால், ஓடுபாதையே தெரியாத அளவு, அடர்த்தியான புகை மூட்டம், பனி மூட்டம் ஏற்படும் சூழ்நிலை உருவாகி உள்ளது. இதையடுத்து இந்திய விமான நிலைய ஆணையம், விமான நிலையத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி மக்களுக்கு வேண்டுகோள் விடுத்து வெளியிட்டு உள்ள அறிவிப்பில்,

பொதுமக்கள் போகிப் பண்டிகையின் போது அதிகாலை நேரத்தில், பிளாஸ்டிக் கழிவுகள், பழைய டயர்கள், அதிக அளவு புகைகளை எழுப்பக்கூடிய கழிவு பொருட்கள் போன்றவைகளை, தெருக்களில் போட்டு எரிப்பதை தவிர்த்து விடுங்கள்.

அவ்வாறு எரிப்பதால், அடர் மூடுபனியில், கரும் புகை கலந்து, விமான ஓடுபாதை தெரியாத அளவு, சூழ்ந்து கொள்கிறது. இதனால் விமான நிலையத்தில் விமான சேவைகள் பாதிக்கப்படுவதோடு, விமான பயணிகளும் பெரும் சிரமத்துக்கு ஆளாகின்றனர்.

எனவே குடியிருப்பு பகுதி மக்கள் விமான சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உள்ளனர்.

போகிப்பண்டிகையின் போது பழையபொருட்களை எரித்ததால் கடந்த 2018-ம் ஆண்டு அதிகபட்சமாக 73 புறப்பாடு விமானங்கள், 45 வருகை விமானங்கள் என மொத்தம் 118 விமான சேவைகள் புகை மூட்டத்தால் பாதிக்கப்பட்டது.

இதன் பின்னர் விழிப்புணர்வுகளால் போகிப்பண் கையின் போது பழைய பொருட்களை எரிப்பது குறைந்து விமான சேவைகள் பாதிக்கப்படுவது, படிப்படியாக குறைந்து வருகிறது.

கடந்த 2024-ம் ஆண்டு, போகிப் பண்டிகை புகை மூட்டம் பனிமூட்டம் காரணமாக 51 விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. கடந்த ஆண்டு போகிப் பண்டிகையின்போது இதைப்போன்ற பாதிப்பு ஏற்படலாம் என்று கருதி, இந்திய விமான நிலைய ஆணையம் முன்எச்சரிக்கை நடவடிக்கையாக, அதிகாலை 4 மணியில் இருந்து, காலை 8 மணி வரையில், சென்னை விமான நிலையத்திற்கு வரும் விமானங்கள், சென்னையில் இருந்து புறப்படும் விமானங்கள் என சுமார் 30 வருகை, புறப்பாடு விமானங்கள் நேரங்கள் மாற்றி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கொடைக்கானல் செல்லும் சுற்றுலா பயணிகளின் கவனத்திற்கு - புதிய அறிவிப்பை வெளியிட்ட வனத்துறை

**கொடைக்கானல், ஜன.12:** புத்தாண்டு, பொங்கல் விடுமுறையை ஒட்டி கொடைக்கானலில் கூட்டம் அலைமோதுகிறது. வெள்ளி நீர்வீழ்ச்சி, கோக்கர்ஸ் வாக், குணா குகை, தூண்பாறை, மோயர்பாண்ட், பைன்பாரஸ்ட், பசுமை பள்ளத்தாக்கு, அப்சர்வேட்டரி, ரோஜா பூங்கா, பிரையண்ட் பூங்கா உள்ளிட்ட இடங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் வரும் நாட்களில் அதிகரிக்கும் என்று கருதப்படுகிறது

இந்நிலையில், கொடைக்கானலில் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களின் நுழைவுக் கட்டணம் இனி ஆன்லைன் முறையில் வசூலிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானலில் குணா குகை, துன்பாறை, மோயார் சதுக்கம், பேரிஜம் ஏரி, பைன் காடுகள் ஆகிய பகுதிகளுக்கான நுழைவுக் கட்டணம் இனி ஆன்லைன் மூலம் மட்டுமே வசூல் செய்யப்படும் என்றும் நேரடிப் பணமாக இனி வசூலிக்கப்படாது என வனத்துறை தெரிவித்துள்ளது

# நெல்லையில் பா.ஜ.க. நிர்வாகியின் வீடு புகுந்து ரூ.26 லட்சம் மதிப்புள்ள நகை-பணம் கொள்ளை



**திருநெல்வேலி, ஜன.12:** திருநெல்வேலி மாவட்டம், சுத்தமல்லி பொன்விழாநகரைச் சேர்ந்த சன்னியாசி, பா.ஜ.க. மாவட்ட வர்த்தக பிரிவு அணி செயலாளராக உள்ளார். இவர் தனது மனைவி மற்றும் குடும்பத்துடன் சென்னையில் வசித்து, அங்கு பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். இதனால் சுத்தமல்லியில் உள்ள வீட்டில் அவரது மாமனார் மாரி, மாமியார் ஆண்டிச்சி (வயது 70) ஆகியோர் மட்டும் வசித்து வருகிறார்கள்.

கடந்த 8ம் தேதி காலையில் பொங்கல் பரிசு தொகுப்பு வாங்குவதற்காக நெல்லை அருகே உள்ள சீவலப்பேரிக்கு மாரி சென்றுவிட்டார். இதனால் ஆண்டிச்சி மட்டும் தனியாக இருந்தார். மதியம் 2 மர்ம நபர்கள் அவரது வீட்டிற்கு வந்தனர். அங்கிருந்த ஆண்டிச்சியிடம் நாங்கள் சீவலப்பேரியில் இருந்து வருவதாக கூறி குடிப்பதற்கு தண்ணீர் கேட்டனர். அவர் உள்ளே சென்று தண்ணீர் எடுத்து வர முயன்றார்.

அப்போது அந்த மர்ம நபர்கள் 2 பேரும் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, ஆண்டிச்சி வாயை அமுக்கினார்கள். பின்னர் கை, கால்களை கயிறு மூலம் கட்டி, அவர் அணிந்திருந்த தங்க சங்கிலி, மூக்குத்தி, கம்மல் என சுமார் 15 சவரன் நகைகளை பறித்தனர். தொடர்ந்து பீரோவை திறந்து அதில் இருந்த 10 சவரன் நகைகள், ரூ.6 லட்சம் பணத்தை கொள்ளையடித்தனர்.

பின்னர் அந்த மர்ம நபர்கள் வீட்டில் முன்பகுதியில் இருந்த கண்காணிப்பு கேமராவை உடைத்து சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டனர். இதற்கிடையே ஆண்டிச்சியின் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் அவரது வீட்டிற்கு சென்று, மீட்டனர். பின்னர் நடந்த சம்பவம் குறித்து ஆண்டிச்சி கூறினார். இதனால் அதிர்ச்சி அடைந்த அவர்கள் இதுகுறித்து உடனடியாக சுத்தமல்லி போலீசுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து இன்ஸ்பெக்டர் சுந்தரமூர்த்தி மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். மோப்ப நாய் வரவழைக்கப்பட்டது. அது சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சிறிது தூரம் ஓடியது. யாரையும் கவ்விப் பிடிக்கவில்லை. மேலும் தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் அங்கிருந்த தடயங்களை சேகரித்தனர். வீட்டில் கொள்ளை போன நகை, பணத்தின் மதிப்பு சுமார் ரூ.26 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். மேலும் அந்த பகுதியில் வேறு எங்காவது கண்காணிப்பு கேமரா உள்ளதா? என்பது குறித்தும் ஆய்வு செய்து வருகின்றனர். நெல்லை அருகே பட்டப்பகலில் பா.ஜ.க. பிரமுகரின் வீடு புகுந்து மூதாட்டியை கட்டிப்போட்டு ரூ.26 லட்சம் மதிப்பிலான நகை, பணத்தை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கிணற்றில் விழுந்த மயில்- தீயணைப்பு வீரர்கள் மீட்டனர்



**தூத்துக்குடி, ஜன.12:** தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை அருகே உள்ள அல்லிகுளம் பகுதியில் கிணற்றில் மயில் ஒன்று தவறி விழுந்து கிடப்பதாக அந்த ஊர் மக்கள் சிப்காட் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன்பேரில் தீயணைப்பு நிலைய அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று 60 அடி ஆழமுள்ள கிணற்றில் தவறி விழுந்த பெண் மயிலை வலை கயிறுகள் மூலம் லாவகமாக உயிருடன் மீட்டு வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். தீயணைப்பு வீரர்களின் துரிதமான மீட்பு சேவையை அல்லிகுளம் ஊர் பொதுமக்கள் பாராட்டினர்.




# பொங்கல் முடிவதற்குள் பெண்களுக்கு இனிப்பான செய்தி வரும்: அமைச்சர் ஐ.பெரியசாமி



**திண்டுக்கல், ஜன.12:** பொங்கல் கொண்டாட்டங்கள் முடிவதற்குள் பெண்களுக்கு இனிப்பான செய்தி வரும் என்று அமைச்சர் ஐ. பெரியசாமி தெரிவித்துள்ளார். பெண்களுக்கு மகளிர் உரிமைத்தொகையாக மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது. 1.37 கோடி பேருக்கு மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வரும் நிலையில், பொங்கல் முடிவதற்குள் இனிப்பான செய்தி வரும் என்று அமைச்சர் ஐ. பெரியசாமி கூறியிருப்பதால், மகளிர் உரிமைத்தொகை உயர்த்தப்பட இருக்கிறதா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக உள்ள ஐ. பெரியசாமி துறையின் கீழ் மகளிர் சுயஉதவி குழுக்கள், கடன் திட்டங்கள் உள்ளிட்ட பல துறைகள் வருகின்றன. எனவே, மூத்த அமைச்சராக உள்ள ஐ. பெரியசாமி தெரிவித்துள்ள இந்த தகவல் மகளிர் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மக்கள் விரும்பாத கட்சியாக காங்கிரஸ் மாறிவிட்டது - நடிகை குஷ்பு



**சென்னை, ஜன.12:** தமிழக பா.ஜ.க துணை தலைவர் நடிகை குஷ்பு கூறியதாவது:-

நாட்டின் ஆத்மாவாக இருப்பவர் மகாத்மா என்பதை எல்லோரும் அறிவோம். காங்கிரஸ் கட்சி அரசின் திட்டங்களுக்கு சோனியா குடும்ப பெயரை மட்டுமே சூட்டி பெருமைப்படுகிறது. ஆனால் பிரதமர் மோடி எந்த திட்டமாக இருந்தாலும் சரி, பிரதம மந்திரி திட்டம் என்றுதான் அறிவித்து வருகிறார். 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தையும் 125 நாட்களாக அதிகரித்து உள்ளார். அதைப்பற்றி எல்லாம் காங்கிரஸ்காரர்கள் பேச மாட்டார்கள். நாட்டுக்காக உழைத்த எத்தனையோ தலைவர்கள் இருக்கிறார்கள்.

சுபாஷ் சந்திரபோஸ், சர்தார் வல்லபாய் படேல், வ.உ.சிதம்பரனார் என்று பலரை சொல்லலாம். அவர்களின் பெயர்களை எல்லாம் வைக்க சொல்லி போராடலாமே. இது மக்களை ஏமாற்றுவதற்காக காங்கிரஸ் நடத்தும் போராட்டம். நாட்டில் இப்போது மக்கள் விரும்பாத கட்சியாக காங்கிரஸ் கட்சி மாறிவிட்டது. எனவே அவர்கள் பேசாமல் இருப்பது நல்லது.

நாட்டில் காங்கிரஸ் ஆட்சியின்போது தான் மிகப்பெரிய ஊழல் அரங்கேறியது. மிக கொடூரமான தீவிரவாத தாக்குதல்கள் நடந்தன. இன்று நாடு அமைதியாக இருக்கிறது. உலகம் முழுவதும் இந்தியாவுக்கு மோடி பெருமை சேர்த்து உள்ளார். காங்கிரஸ் கட்சி கரைந்து வரும் கட்சி. இப்போது கூடுதல் தொகுதிகள் கேட்பதாக தகவல்கள் வருகிறது.

அவர்கள் போட்டியிடும் தொகுதிகளில் எல்லாம் ஜெயிப்போம் என்று சொல்ல முடியுமா? தேர்தல் நேரத்தில்தான் தி.மு.க. மக்களைப் பற்றி யோசிப்பது போல் பாசாங்கு காட்டுவார்கள். ஆசிரியர்கள் போராட்டம், தூய்மை பணியாளர்கள் போராட்டம், அரசு ஊழியர்கள் போராட்டம், டாக்டர்கள் போராட்டம் என்று பலரும் தங்கள் உரிமைகளுக்காக போராடுகிறார்கள்.

அவர்களைப் பற்றி எல்லாம் இதுவரை யோசிக்காத தி.மு.க. தேர்தல் நேரத்தில் பொய்யான வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்றப் பார்க்கிறது. தமிழகத்தில் உள்ள கோடிக்கணக்கான குடும்பங்கள் மாதந்தோறும் ரேஷன் கடைகளில் சென்று பொருட்கள் வாங்குகின்றனர்.

ஆனால் இப்போது தேர்தல் வரும் நேரத்தில் மட்டும் அவர்களைப் பற்றி யோசிப்பது போல் வெளிக்காட்டுவதற்காக பணத்தை கொடுத்து ஏமாற்றப் பார்க்கிறார்கள். ஆனால் இந்த முறை மக்கள் ஏமாறமாட்டார்கள். தேசிய ஜனநாயக கூட்டணி மிகப் பெரிய வெற்றி அடையும். எடப்பாடி பழனிசாமி மீண்டும் தமிழக முதல்-அமைச்சராக பொறுப்பு ஏற்பார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 10% வாக்குறுதிகளைக்கூட நிறைவேற்றாமல் அடுத்த தேர்தலுக்கு வாக்குறுதி அளிக்க குழுவா? - அண்ணாமலை



**சென்னை, ஜன.12:** கடந்த தேர்தலுக்கு அளித்த 10 சதவீத வாக்குறுதிகளைக் கூட நிறைவேற்றாமல் அடுத்த தேர்தலுக்கு வாக்குறுதி அளிக்க தனது தங்கையின் தலைமையில் குழு அமைப்பதா? என முதல்வர் ஸ்டாலினுக்கு பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தள பதிவில் அவர் கூறியிருப்பதாவது: ஆசிரியர்கள் போராடும் நிலை திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் குறித்து, முதல்வர் ஸ்டாலின் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு சதவீத கணக்கைக் கூறி வருகிறார். ஆனால் பகுதிநேர ஆசிரியர்கள், தங்களுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை அவருக்கு நினைவூட்ட, வாக்குறுதி எண் 181-ஐ, நெற்றியில் எழுதிப் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக் கிறார்கள்.

கடந்த 2016 தேர்தலிலேயே, பகுதிநேர ஆசிரியர்களை பணிநிரந்தரம் செய்வோம் என்று வாக்குறுதியாகக் கொடுத்து, போராட்டத்துக்கு நேரில் சென்று ஆதரவளித்த அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முதல்வர் ஸ்டாலின், ஆட்சிக்கு வந்த பிறகு அவர்களை முற்றிலுமாகப் புறக்கணித்து வருகிறார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக, 10 சதவீத வாக்குறுதிகளைக் கூட முழுமையாக நிறைவேற்றாமல், அடுத்த தேர்தலுக்கு வாக்குறுதி அளிக்க, தனது தங்கை தலைமையில் குழு அமைத்திருக்கிறார் முதல்வர் ஸ்டாலின். தமிழக மக்களை திமுக எத்தனை ஏளனமாகப் பார்க்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. திமுகவின் நம்பிக்கை மோசடிக்கு 2026 தேர்தலில் தமிழக மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynews@gmail.com